# அர்ச்சுனா

கல்வி — முயற்சி — பெருவாழ்வு

ஒக்ரோபர் 1988



சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ்

விலை ரூபா 4/=

# தைப்பொங்கல் பரிசுப் போட்டி

மாணவர்களிடத்து இலக்கிய உணர்வு பெருகி மாணவர் உலகம் ஆக்க இலக்கியப் பாதையில் நடை பயில வேண்டும் என்று அர்ச்சுன விரும்புகிறான்.

இந்த அடிப்படையில் 1989 ஆம் ஆண்டு தைப்பொங்கல் நன்னுள் முன்னிட்டு மாணவர் பங்குபெறும் பின்வரும் போட்டியினை நடாத்த அர்ச்சுன முன்வந்துள்ளான்.

| முதல் பரிசு:- | இரண்டாம் பரிசு;- | மூன்றும் பரிசு:: |
|---|---|---|
| ரூ 500/- | ரூ 300/- | ரூ 200/- |

போட்டியில் முதல் மூன்று பரிசுகளைப் பெறும் மாணவரின் பாடசாலைகள் ஒவ்வொன்றுக்கும் முன்னூறு ரூபா பெறுமதி வாய்ந்த சுவர்க்கடிகாரம் வழங்கப்படும்

குறள் விளக்கச் சிறுகதைப் போட்டி :

''ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்''

''மகன் தந்தைக் காற்றும் உதவி யிவன்தந்தை
எந்நோற்ருன் கொல்எனும் சொல்''

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக உலகியற்றி யான்''

''அறிவினுன் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போற் போற்ருக் கடை.''

''கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.''

''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்ரேன் எனக்கேட்ட தாய்''

விதிகள்:-

1. ★ மேற்காணும் குறட்பாக்களில் ஏதேனும் ஒன்றை அடிப்படையாக வைத்து சிறு கதையை எழுத வேண்டும்.
   ★ கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பு மாணவர்கள் இப்போட்டியில் பங்கு பெறத் தகுதி உடையவர்கள்.
   ★ சிறுகதை 4 புல்ஸ்காப் தாள் பக்கங்களுக்கு மேற்படலாகாது. தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
   ★ ஆக்கம் மாணவரின் சொந்தப் படைப்பாக இருத்தல் வேண்டும். வேறு பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளிவந்தவையாக இருத்தலாகாது.
   ★ பரிசுபெறும் ஆக்கங்கள் அர்ச்சுனவில் வெளிவரும். பதிப்புரிமை அர்ச்சுனவுக்கு உண்டு.
   ★ மாணவனது சொந்த ஆக்கம் என்ற கல்லூரி அதிபரின் உறுதியுரை ஆக்கத்துடன் இணைக்கப்படவேண்டும்.
   ★ நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

போட்டி முடிவு திகதி:. 31 - 12 - 88

அனுப்ப வேண்டிய முகவரி;

ஆசிரியர்,
அர்ச்சுன,
அஞ்சல் பெட்டி எண்; 23,
யாழ்ப்பாணம்.

அர்ச்சுனா | தனு: 1 | கணை :6 | ஒக்டோபர் 88 | விலை ரூபா: 4·00

# உங்களோடு ஒரு கணம்

மலரும் உள்ளங்களே!

அடுக்களையில் ஓர் உறி தொங்குகின்றது. உறியில் ஒரு சட்டி பால் வைக்கப் பட்டு உள்ளது. அதனைப் பாற்கலன் என்பார்கள். பாற்கலன் மீது ஒரு பூனை இருக்கின்றது. பூனை பாலைக் குடிக்கத் தொடங்குகிறது.

அப்போது அடுக்களையின் வேறு ஓரிடத்தில் "கரப்பத்தான் பூச்சி" இருப்பதைப் பூனை கண்டது இந்தப் பூச்சியைக் கரப்பருந்து என்றும் சொல்வார்கள். பூனைக்கு மறுபெயர் பூளை. பாற்கலன் மேல் கரப்பருந்தைக் கண்டதும் பூனைக்கு ஒரே குஷி!

பூளை பரபரப்பு அடைந்தது. பாலைக் குடிப்பதை மறந்து கரப்பருந்து மீது பாய்ந்தது. கரப்பருந்து பறந்து தப்பியது. பாற்கலன் கீழே விழுந்து உடைந்தது. சத்தம் கேட்டு வீட்டாரும் வந்து பூளைக்கு அடி விழுந்தது.

கவனத்தைச் சிதைத்ததால் பாலையும் குடிக்காமல், கரப்பருந்தையும் உண்ணாமல் பூனை திண்டாடியது.

மாணவர்களும் இப்படி புலன்களை ஓடவிடாது, கவனத்தைச் சிதைக்காமல் படிக்கவேண்டும். பரபரப்பு இல்லாமல் பரப்பமைந்து கருத்துக்களுக்குச் செவி கொடுங்கள். அப்போது படிப்பில் புகழ் அடைவீர்கள்.

எந்தக் காரியத்தில் நீங்கள் ஈடுபட்டாலும், கண்ணுங் கருத்துமாக இருங்கள். கண் துஞ்சாமல், பசி நோக்காமல் பாடுபடுங்கள். இவனே நல்ல மாணவன்.

இப்படிக் கூறுகிறது. திருவருட் பயன் என்ற நூல். அக்குறட்பா இதோ :-

பரப்பமைந்து கேண்மின் பாற்கலன் மேல்பூளை
கரப்பருந்து நாடும் கடன்.

— ஆசிரியர் —

## முயன்று பாருங்களேன்

## எண்சிலம்பம்

அன்பார்ந்த மாணவ மணிகளே!

கணிதத் துறையில் உள்ள அறிவை வளர்க்கும் நோக்குடன் அர்ச்சுனுவில் எண்சிலம்பம் தொடர்ந்து வெளிவரும்.

எண் சிலம்பத்தைப் படியுங்கள். சிந்தியுங்கள். தேவையான இடத்தில் கணிதப் பிரச்சினைகளைச் செய்து பாருங்கள்.

விடைகளை எண்சிலம்பம் கூப்பனில் எழுதி அனுப்பி வையுங்கள். இப் போட்டியில் நடுவர்களின் முடிவே இறுதியானது.

சரியான விடைகளை எழுதும் அதிர்ஷ்டசாலிக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

பரிசு பெற்றவர்கள் கடிதமூலம் அழைக்கப்படுவர் பரிசுக்குரியவரே உரிய அடையாள அத்தாட்சிகளுடன் நேரில் வந்து பரிசைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**பரிசு விபரம்:-** முதலாம் பரிசு: ரூபா 50/=
இரண்டாம் பரிசு; ரூபா 25/=
மூன்றும் பரிசு: ரூபா 15/=

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 29-10-88

**அனுப்ப வேண்டிய முகவரி:**

எண்சிலம்பம் - 4,
''அர்ச்சுனு''
அஞ்சல்பெட்டி எண் 23,
யாழ்ப்பாணம்.
இலங்கை

## வாழை மரம்

வாழைமரம் வாழைமரம்
வழுவழுப்பாய் இருக்கும் மரம்
சீப்புகளாய்ப் பலபழங்கள்
தின்றிடவே கொடுக்கும்மரம்.

பந்திவைக்க இலையெல்லாம்
தந்திடுமாம் அந்தமரம்
காய்பூவும் தண்டுகளும்
கறிசமைக்க உதவும்மரம்.

கலியாணப் பந்தலிலே
குலையோடு நிற்கும்மரம்
நிலையாக நின்றிடவே
நிரைநிரையாய்க் குட்டிதரும்.

— செல்வி. ச. சரோஜினி —
(இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.)

## கதிரவனே! வருவாயே!

காலையில் உதிப்பாய் கதிரவனே!
கைகள் கூப்பி வணங்கிடுவோம்!
கோலம் போட்டு மகிழ்ந்திடுவோம்!
குளித்துப் பாடல் படித்திடுவோம்!

காகம் குருவி கரைந்தோடும்!
காட்டு விலங்குகள் களித்தோடும்
மேகம் பொன்னிறமாய் ஓடும்!
மேதினி எங்கும் ஒளி தோன்றும்!


வெயிலை மழையைத் தருபவனே!
வேண்டும் வாழ்வைத் தருபவனே!
உன்னைப் போற்றித் துதி செய்வோம்!
ஒவ்வொரு நாளும் வருவாயே!

— இராஜி. சண்முகநாதன் —

# எண் சிலம்பம்

ஆக்கம் உதங்கா

## போட்டி இல - 5




பெயர் செல்வன் / செல்வி ..............................

..................................................

முகவரி ..............................................

..................................................

கையொப்பம் ..................... .................

### இடமிருந்து வலம்

(a) ஒரு சோடி என்பது இதுதான்.
(b) ஐந்தின் கனம்.
(e) நாலரை டசின்.
(g) சைவ நாயன்மார்களின் எண்ணிக்கை.
(h) x+100 என்பதில் x மறை பத்தொன்பது.
(j) நூறிலிருந்து கீழ் நோக்கி முதலாவது முதன்மை எண்.
(k) இந்து சமயத்தின் முதல் மூர்த்திகள் இவ்வெண்ணிக்கை உடையவர்கள்.
(l) ஒரு இருத்தல் இரண்டு கிராம் கிராமில்
(m) வெறுமை தான்
(n) எழுநூற்றி இருபத்தொன்பதின் வர்க்க மூலம்.
(o) ஐந்தாவது முக்கோணி எண்.
(p) துர் அதிஷ்டமான எண் என்பார்கள்.
(r) எண் அடி எட்டில் இதன் பெறுமதி 63 எண் அடி பத்தில்
(t) பன்னிரண்டு அடியில் இதன் குறியீடு 100

### மேலிருந்து கீழ்

(a) இதன் எண் சுட்டி அதிர்ஸ்ட எண் எனக் கருதுவார்கள்.
(c) பத்தாவது முதன்மை எண்.
(d) $x^2 - 2$ல் $x = 5$ ஆகும்.
(f) ஏழுடசின் தலைகீழாக நிற்கின்றது.
(g) மூன்றைக் குறைத்தால் சிவனின் திருவிளையாடல்களின் எண்ணிக்கையாகும்.
(i) ஒன்றரை நூற்று வீதத்தில் மூன்று குறைய.
(j) $x^3 - 39$ என்பதில் $x = 10$
(n) விக்கிரமாதித்தன் சிம்மாசனப்படிகளின் எண்ணிக்கை தலைகீழாக நிற்கிறது.
(p) இன்னும் இரண்டு சேர்த்தால் இத்தனையும் பெற்று வாழவேண்டும் என வாழ்த்துவர்.
(q) 576ன் அரையாம் அடுக்கு.
(s) அரை டசின்களில் பதின்மூன்று.

# ஒரு திருப்பு முனை

சிறப்புச் சிறுகதை



அந்தப் பிரமாண்டமான கட்டிடம்...... அதன் இருமருங்கும் வானுற உயர்ந்து வளர்ந்து நிற்கும் அசோக் மரங்கள்...... அது ஒரு ஆண்கள் பாடசாலை...... பாடசாலையின் வாசலில் இருந்து இரண்டு, மூன்று சாலைகளாகப் பிரித்து, செல்லும் பாதைகள் - பாதைகளின் இருபுறமும் அழகாகக் கத்தரித்து வளர்க்கப்பட்ட குரோட்டன் செடிகள் - எத்தனையோ டாக்டர்களை, பொறியியல் வல்லுனர்களை, நல்ல ஆசிரியர்களை உருவாக்கிய பெருமிதத்தில் நிமிர்ந்து உயர்ந்து நின்றது அந்த மாடிக் கட்டிடம். பாடசாலையின் உள்ளே நுழைந்ததும், வலது பக்கமாகப் பிரிந்து செல்லும் சாலை...

அந்த மாடியில் கடைசியாக உள்ள அறையில்தான் சுந்தரின் வகுப்பு இருந்தது. எந்த ஆசிரியரும் வகுப்புக்கு நுழைவதற்கு முன், ஒரே ரகளை செய்யும், சுந்தரும் அவனது சகாக்களும் பாட ஆசிரியர்கள் கீழே மாடிப்படியருகே வருவதைக் கண்டதும், மேலே நின்று அவதானித்துவிட்டு 'டே, கரடி வருகிது .. டே கரிமூக்கு வருகிது ஒன்றரைக் கண் வருகிது ..' ஒவ்வெருவருக்கும் ஓவ்வொரு பட்டம் சூட்டியபடி 'கப்' 'சிப், என்று இருந்து விடுவார்கள்- இந்த பட்டம் சூட்டுவதில் சூரப் புலி சுந்தர்தான் வகுப்பின் கடைசிவாங்கில் எப்போதும் அமர்ந்திருக்கும் அவனுக்கு வகுப்பை இரண்டுபடுத்துவது வசதியாக இருந்தது ஒரு பிரபல ஆஸ்பத்திரியின் பிரபல்யமான வைத்திய நிபுணர் ஒருவரின் மகன் சுந்தர்-

வகுப்பில் முதன்மையான மாணவனாகத் திகழும் சுந்தரிடம் ஏனோ இந்தத் தீயபழக்கமும் குடிகொண்டுவிட்டது- வகுப்பின் கடைசி வாங்கில் இருந்து கொண்டு வகுப்பை இரண்டுபடுத்திவிட்டு...... ஆசிரியர்களின் பார்வையிலிருந்து தப்பிக்கொள்வதில் அவனுக்கு நிகர் அவன்தான் இதில் அவனுக்கு அலாதிப் பிரியம் - தன் சகமாணவர்கள் தன் கேலிகளைக் கேட்டுச் சந்தோஷப்படுகின்றார்களே என்பதில் அவனுக்கு பரம திருப்தி பிரபல டாக்டரின் மகன் என்பதனாலோ, வகுப்பிலும் முதன்மையானவன் என்பதனாலோ அவன் செய்யும் திருகுதாளங்கள் எதுவுமே அம்பலமாவதில்லை. சகமாணவர்கள் அனைவருமே அவனுக்குள் அடக்கம்.

ஒருதடவை அந்தக் கல்லூரி ஆசிரியர்கள் அனைவரது பெயர்களுக்கும் அருகில், அவர்களது தராதரப் பட்டங்களுக்குப் பதில்,...... ஏதோ பட்டங்களைக் கொண்ட பட்டியல், ஒன்றை அவனது வகுப்பு ஆசிரியர் கண்டெடுத்து விட்டார் - அன்று சுந்தர் பாடசாலைக்கு வரவில்லை- யாருமே சுந்தர் எழுதியது எனக் காட்டிக் கொள்ளாததால் அனைவருமே அதிபரின் தண்டனைக்குள்ளானர்கள்- எதற்குமே கலங்காத சுந்தர், தன் தொழிலைக் கைவிடவில்லை.

அன்று அவனது பாடசாலைப் பரிசளிப்பு விழா' தன் பழையமாணவர்களையே பிரதம விருந்தினராக அழைத்துக் கௌரவித்து வைப்பது அந்தப் பாடசாலையின் தனிச் சிறப்பு

எனவே இம்முறை அக்கல்லூரியின் பழைய மாணவனும், பிரபல வைத்திய நிபுணரு மான டாக்ட்டர் வித்தகன் அவனது தந்தை அழைக்கப்பட்டிருந்தார்- சுந்தர் தன் பெற் ரோருடன் விழாவிற்கு காரில் சென்று கொண் டிருந்தான். தனது தந்தையார்தான், விழா வின் பிரதம விருந்தினர் என்றும் அவர் முன் னிலையில் தனது அன்னையின் கையினுல் வகுப் பில் முதன்மையான மாணவனுக்குரிய பரிசில் களைப் பெற்றுக் கொள்ளப்போகிறேனே என்ற பெருமிதத்திலிருந்த சுந்தரருக்கு, தன் தந் தையார் காரை திடீரென நிறுத்தியதும் ஒன் றும் புரியாமல் விழித்தான். அப்பா அவசர, அவசரமாக இறங்கி காரின் பின்புறமாகச் செல்வதை அவதானித்தவன் உற்று நோக்கி னுன் – வயது முதிர்ந்த ஒருவரை வணங்கி விட்டு பின் கைத்தாங்கலாக, மிகுந்த மரியாதையுடன் அழைத்து கூட்டி வந்து முன் கதவைத் திறந்து, அம்மாவை பின் சீற்றில் அமரும்படி கண்களால் காட்டிவிட்டு தனக்கு அருகே அவரை அமர்த்தினுர் - சுந்தருக்கும் அம்மாவுக்கும் எதுவுமே புரியவில்லை-

பாடசாலைக்குள் கார் சென்றதும், காரை விட்டு இறங்கிய சுந்தரின் அப்பா, அவரை அழைத்துச் சென்று மேடையில் அமர்த்தினர். மேடையில் கம்பீரமாக அமர்ந்திருக்கும் அப் பாவையும், அம்மாவையும் அடிக்கடிபார்த்துக் கொண்டான் சுந்தர். ஆனுல் அவன் அப் பாவோ தன்னருகே அமர்ந்திருக்கும் அந்த வயது முதிந்தவரிடம் மிகவும் பவ்வியமாகப் பணிவாக கதைத்துக் கொண்டிருந்தார்- அப்பா யாருடன் இவ்வளவு விசுவாசமாகப் பணிவாகக் கதைத்துக் கொண்டிருக்கின்ருர் என்பது அவனுக்குப் புரியாத புதிராகவும் ஆச்சரியமாகவும் இருந்தது.

விழா ஆரம்பமானது - பிரதம விருந்தி னரை வரவேற்று அதிபரின் உரை ஆரம்ப மானது. அதிபரின் உரையைத் தொடர்ந்து பிரதமவிருந்தினரின் உரை ஆரம்பமானது 'இதோ என்னருகில் இம்மேடையில் அமர்ந்தி ருப்பவர் எனது ஆசிரியர் மட்டுமல்ல, இக் கல்லூரியின் பழைய மாணவனும் கூட—இன்று இவ்விழாவின் பிரதம விருந்தினராக நீங்கள் என்னை அழைத்திருந்தாலும், எனக்கு அறி வையும், அளவற்ற அறிவுரைகளையும் வழங்கி, என்னை இக்கல்லூரியின் சிறந்த மாணவனுக உருவாக்கியது மட்டுமல்ல, இன்று ஓர் அரிய சேவையை மக்களுக்கு வழங்கக்கூடிய தரத் திற்கு என்னை உயர்த்திய எனது ஆசிரியரை இந்த விழாவில் சந்திக்கும் பெரும்பேறு எனக் குக் கிடைக்கும் என நான் எதிர்பார்க்கவே இல்லை- எனவே இவ்விழாவின் பிரதம விருந் தினராகவும் அவரை இக்கல்லூரி கௌரவிக்க வேண்டும்' என்பது என் அவா எனக் கூறி அவருக்கென அங்கே மேடைக்குக் கொண்டு வரப்பட்ட மாலைகளை டாக்டர் வாங்கி அவ ரது கழுத்தில் அணிந்து ஆசிரியரைக் கௌர வித்தார்.

''என் அப்பாவின் பிள்ளையாக இரு க்க நான் தகுதியற்றவன்- அப்பா முன்னிலை யில் என் பரிசுகளை வாங்கவோ, இந்தப் பரிசு களுக்கோ... நான் அருகதையற்றவன்'' சுந்த ரின் உள்மனம் குற்ற உணர்வுடன் உறுத்திக் கொண்டே இருந்தது.

## - ஸ்ரீகுமாரி. கதிரித்தம்பி -

விழாவின் முக்கிய அம்சமான பரிசளிப்பு வைபவம் ஆரம்பமானது- சுந்தரின் பெயர் இரண்டு மூன்று தடவைகள் வாசிக்கப்பட் டது- அவன் நண்பர்கள் அவனை எவ்வளவோ வற்புறுத்தியும் பரிசு வங்கச் செல்ல மறுத்து விட்டான்- என் அப்பாவை, 'அப்பா' என்ற ழைக்கவே நான் தகுதியற்றவன். எனக்கு கல்வி என்னும் ஊற்றை வாரி வழங்கிய ஆசி ரியர்களை நான் மதிக்கத் தவறிவிட்டேனே- எனது வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு படிக் கற்கள் என் ஆசிரியர்களல்லவா? அவர்களல் லவா தெய்வம்? ஆசிரியர்களை மதிக்காமல், அவர்களைப் புறங்கூறிய எனக்குப் பரிசில்கள் எதற்கு? ஒரே பிடிவாதமாக மறுத்துவிட் டான்-

விழாவில் பரிசில்களைப் பெற சுந்தர் மேடைக்கு வராத காரணத்தை வீட்டிற்கு வந்ததும் சுந்தரின் அப்பா அறிந்து கொண் டார்-

தன் மகன் சுந்தரைத் திருந்துவதற்கு ஒரு திருப்புமுனையாக பரிசளிப்பு விழா அமை ந்துவிட்ட மகிழ்ச்சி டாக்டர் வித்தகனுக்கு. இனி சுந்தர் புதுமனிதன்- ★

# அவன் எண்ணம்

செல்வன். மு ஐங்கரன்
யாழ் இந்துக் கல்லூரி

"குணம் நீ இன்னும் எழும்பவில்லையா? எழும்பு எழும்பு" "நீ இண்டைக்கு யாரையோ போய்ச் சந்திக்க வேணுமெண்டனியல்லோ" என்ற தாயின் குரல் செவிகளில் பாய்ந்தது

குணம் சோம்பல் முறித்தபடி பாயிலிருந்து எழுந்தான். அவன் முதல் நாள் அங்கு இங்கு என்று வெளிநாடு செல்வதற்கான அலுவல்களில் மும்முரமாக ஈடுபட்டிருந்தான். எனவேதான் அத்தனை சோம்பல் உருவாயிற்று. எழுந்து கிணற்றடியை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

குணம்! ஆம் பெயருக்கேற்றபடி சிறந்த நற்குணங்களைக் கொண்டவன் எல்லோருடனும் அன்பாகப் பழகும் இனிய சுபாவம் கொண்டவன், எதற்கும் கோபப்படாத, கள்ளங் கபடம் அற்ற வெள்ளையுள்ளம் நிறைந்தவன். இளமையிலே அதிகம் வசதியானவர்கள் என்று கூறமுடியாவிடினும் ஓரளவு செல்வந்தர்கள். சீரும் சிறப்பாக வாழ்ந்தவர்கள். ஆம் எத்துணை நாட்களுக்கு அத்தகைய சிறப்பு நீடித்தது. அவரின் சிறப்பு வாழ்க்கை காலதேவனுக்குப் பொறுக்க வில்லை.

மரணதேவனின் பிடியில் சிக்கினார் குணத்தின் தந்தை. "விபத்து" என்ற வடிவில் வந்த மரணதேவன் இன்பம், மகிழ்ச்சி, சிறப்பு என்பனவற்றிற்கு இலக்கணமாக வாழ்ந்த குடும்பத்தின் ஒப்பற்ற தலைவனைக் கவர்ந்து சென்றுவிட்டான். குணம் அப்பொழுது ஏழேயேழு வயது பச்சிளம் பாலகன். அவனுக்கு மூன்று இளைய சகோதரர்கள். அவனுடைய கடைசித் தங்கச்சி பால்மணம் மாறாத பச்சிளம் குழந்தை.

குணமும் தாயாரும் செய்வதறியாது திகைத்தனர். அவர்கள் சிறப்புற்றிருந்த காலத்தில் அவர்கள் மீது பொறாமை கொண்ட சமூதாயம் வெளியே அவர்கள் மீது இரக்கம் கொண்டது போலக் காட்டினாலும் மனமார மகிழ்ந்தது. உற்றார், உறவினர் யார் என்பதே புரியாத புதிர். பணம் இருந்தால் தானே உற்றமும், சுற்றமும் அன்றாடம் சாப்பாட்டிற்கே கஸ்டப்பட வேண்டிய நிலை உருவாணது. இருப்பினும் குணத்தின் தாயாரின் உறுதியான நெஞ்சுரமும், தன்னுயிரைத் தியாகம் செய்தாயினும் தன் மக்கட் செல்வங்களை தன் னிலைக்குக் கொண்டு வரவேண்டும்என்ற அழுத்தமான, அசைக்கமுடியாத சிந்தனையுமே அவர்களை இன்று ஓரளவு வளர்ந்தவர்களாக அன்றாடம் சாப்பாட்டிற்கு கஸ்டப்படவேண்டிய நிலையிலிருந்து மீண்டவர்களாக ஆக்கி விட்டது.

எத்துணை சிரமங்கள் இடர்கள் வந்தாலும் தன்மகன் சிறப்பான கல்வி பெற்று மற்றவர்கள் அவனைச்சான்றோன் என்று வாயொழுகக் கூறும் நிலை உருவாக வேண்டும் என்று மனக் கோட்டை கட்டி வந்தாள் குணத்தின் தாயார். குமார் கல்வியில் தன்னால் இயன்றமட்டும் அக்கறை காட்டி அயராத உழைப்புடன் ஈடுபட்டு சாதாரண தரப் பரீட்சையில் திறைமையான சித்தியடைந்தும் விட்டான்.

"நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் தெய்வம் ஒன்றுமில்லை" என்பது போல நினைப்பதொன்று, நடப்பதொன்றாகி விடுகின்றது. சனிபகவானின் பார்வை அந்தக் குடும்பத்தின் மீது விழுந்து விடுகின்றது. குணத்தின் தாய்க்கு "பாரிசவாதமாகிய" கொடிய எமன் வந்து அவளை படுத்தபடுக்கையாக்கி விடுகிறது. இப்பொழுது குணம் வளர்ந்து விட்டதால் தாயின் நிலைமையை உணர்ந்தான். வேலை தேடும் படலத்தை ஆரம்பித்தான் படிப்பைத் தொடர அவனது உள் மனம் விரும்பினதாயினும் சாப்பாட்டிற்கே வழியில்லை என்னும்

இக்கட்டான சூழ்நிலையில் படிப்பைப் பற்றிச் சிந்திப்பதேது.

வேலை தேடுவதென்றால் சும்மாவா? இக் காலத்தில் திறைமைக்குயார் மதிப்பளிக்கிறார் கள? எங்கும் எதிலும் மோசடி, ஊழல், லஞ் சம் அப்பப்பா சமுதாயமே குட்டிச் சுவர கி விட்டது. இருப்பினும் சமுதாயத்தில் உள்ள அனைவரும் அவ்வாறானவர்கள் தானா? இல்லவே இல்லை. நத்தை வயிற்றிலும் முத்துப் பிறக் கும் தானே. யாரோ ஒரு புண்ணியவாளர் தமக்கு அவசரமாக ஒரு காசாளர் தேவை யென்பதால் தமது கடையில் குமாரை அப் பதவிக்கு அமர்த்தினார்.

அவ்வூதியம் இன்றைய விலைவாசி நிலைமைகளில் எதற்குப் போதுமானது. இருப் பினும் குணமும், அவளது நோய்வாய்பட்ட தாயாரும், சகோதரிகளும் அரை வயிறு கால் வயிறு கழுவக் கூடியதாயிருந்தது. இந்நிலையில் எங்கும் வெளிநாட்டு மோகம் முளைத்து கிளை விட ஆரம்பித்திருந்தது நாளடைவில் குமா ருக்கும் அதிலே ஒருகவனம் செல்ல ஆரம்பித் தது. தனது குடும்பத்தின் நிலையை உணராத வன் அல்ல அவன். இருப்பினும் இந்த ஊதி யத்தைக் கொண்டு தனது மூன்று சகோதரி களையும் எவ்வாறு கரைசேர்ப்பது? எவ்வாறு அவர்களுக்கு சிறப்பான ஒரு வாழ்க்கையைப் பெற்றுக் கொடுப்பது? என்று அல்லும் பகலும் சிந்திக்கலானான். இதை எண்ணி யெண்ணியே அவனது நெஞ்சம் விம்மி வெதும்பியது

அவனுக்குத் திடீர் என்று ஒரு எண்ணம் உதித்தது. ''நமக்குச் சொந்தமாக உள்ளவை இரண்டே இரண்டு, சொந்தக் குடியிருக்கும் அந்தச் சிறு வீடும், எனது தாயாருடைய தாலிக் கொடியுமாகும். பொன என்ற ரீதியில் தாலிக் கொடி மட்டுமே எனவே அதை அடகு வைத்து வெளிநாடு சென்றால் அங்கு ஏதாவதொரு சிறுவேலையைத் தேடி அதை மீட்டு விடலாம்''

இப்படி அவன் சிந்தனைகள் பல்வேறு திசையி லும் சிறகடித்துப்பறந்தன இருப்பினும் தாலிக் கொடி மீது கைவக்க அவனது உள்மனம் சிறிது சங்கடப்பட்டது தாலிக்கொடி என்பது இந் துக்களைப் பொறுத்தமட்டில் எத்தனை புனி தமான ஒரு பொருள். அவர்கள் ஓரளவு சுகப் புற்ற நிலையில் அது செய்யப்பட்டிருந்ததால எட்டுப் பத்து பவுணுவது இருக்கும் என்று அவன் கற்பனையில் மூழ்கினான்.

தனது சகோதரிகளுடன் இது பற்றிக் கதைத்தபொழுது அவர்கள் முதலில் அதற்கு மறுப்புத் தெரிவித்தனர். எனினும் குணம் அவர் களுக்கு நன்றாக எடுத்துக் கூறிய பின்னர் அவர் கள் ஒப்புக்கொண்டனர் தாயிடம் நேரடியாகக் கேட்பதற்கு அவனுற்குத் தயக்கமாகஇருந்தது. ஒரு நாள் குணம் வெளியில் செல்லப் புறப்பட்டிருந்த சமயம் ''எடமோனை குணம் இங்கு ஒருக்கா வா தம்பி'' என்ற தாயின் குரல் அவனைத் தடுத்து நிறுத்தியது சகோதரி கள் இவ்விடயத்தைப் பற்றி ஏற்கனவே தாயா ரிடம் கூறிவிட்டனர்.

''என்னம்மா'' என்று கேட்டபடியே தாயின் அறைக்குச் சென்றான். ''இப்படி இரு மோனை'' என்று சிரமப்பட்டுக் கூறினார். நாட் செல்லச் செல்ல மருந்துகள் பாவித்து வந்தாள் என்றாலும் வருத்தம் கூடிவிட்டது. அத்துடன் இருமல் வேறும் ஏற்பட்டு விட்டது.

''என்ன தம்பி நீ வெளிநாட்டுக்குப் போகப்போறியாம் கலா சொன்னாள் உண் மையா?'' என்று கேட்டாள். குணம் கீழே குனிந்தபடி மௌனமாக ஆம் என்பதற்கு அறிகுறியாக தலையை அசைத்தாள்.

''நீ எங்களைஎல்லாம் விட்டிட்டு அவ்வளவு தூரத்தில போயிருந்தா நாங்க என்னெண்டு நிம்மதியாய் இருக்கிறது உன்னைப் பிரிஞ்சு, ஒரு நிமிடம் கூட எங்களால் இருக்க முடியாது'' என்று விம்மி விம்மியபடி கூறி முடித்தாள். சகோதரிகள் தாலிக்கொடி விசயத்தைப் பற்றிக் கூறியிருந்தும் தாய் அதுபற்றி ஒன்றும் கூறாதது அவனுக்கு ஒரு தெம்பை ஊட்டியது. அவள் அனைத்தையும் விளக்கமாக எடுத்துக் கூறி ஒரு வழியாகத் தாயாரையும் சம்மதிக்க வைத்துவிட்டாள். நாளை வெளிநாடு செல்வ தற்கும் ஆயத்தமாகி விட்டது

''எண்ணண்ண இன்னும் கிணற்றடியில் என்னசெயிற கெதியா வா, தேத்தண்ணி ஊத் திற்றன்'' என்று தங்கையின் குரல் அவனை இந்த உலகத்திற்கு இழுத்து வந்தது ''அடா நான் இவ்வளவு நேரமும் கிணத்தடியிலையா நின்டனான்'' என்றை கடந்தகால வாழ்க்கை யைப் பற்றி இவ்வளவு நேரமும் சிந்தித்துக் கொண்டிருந்திட்டன். அதுவும் ஒருவகையில் நல்லது தான்,, என்று தனக்குள் கூறியவாறு கிணற்றில் தண்ணீர் அள்ளி முகத்தைக் கழு வினான்

வெளிநாடு சென்று தான் உழைத்தபின் தனது குடும்பம் எப்படிச்சிறப்புறும் என்ற எண் ணங்கள் அவன் நெஞ்சில் நிழலாடின. ✻

குழந்தை. ம. சண்முகலிங்கம்

# முயலார் முயல்கிறார்

அங்கம் II

-இறந்த குரங்கு துள்ளி எழுந்து வந்து-

குரங்கு:- ஆர் ராசாவாக்கினது?? ...... நாங்கள் தான்!

பாடு IV;- இதென்ன இது?!...... செத்த குரங்கார்
எழும்பி நிண்டு கதைக்கிறார்!!

குரங்கு:- அட, நீர் ஒரு பக்கம்! இது நாடகந்தானே!?
நீங்கள் பேசாமல் இருந்து பாருங்கோ

முயல்:- தேவை வரேக்கை வந்து உதவுங்கோ

நரி:- செத்தவை எல்லாம் எழும்புங்கோ
- இறந்தவர் அனைவரும் எழுந்து வருகின்றனர் -

பன்றி:- இந்தச் சிங்கத்துக்கு நாங்கள் ஏதாவது செய்ய வேணும்

நரி:- என்ன செய்வம்? ஒரு விருந்து வைப்பமே?

மான்:- அதைத்தானே ஒவ்வொரு நாளும் செய்யிறம்.

முயல்:- ஏன்?...... நாங்கள் இப்பிடிச் செய்தால் என்ன?

அனைவரும்:- எப்பிடி?

முயல்:- நாங்கள் எல்லோரும் போய்ச் சிங்கத்தைச் சந்திப்பம்.

பாடு I;- நீங்கள் சிங்கத்தைச் சந்திக்கவோ!

குரங்கு:- சிங்கத்தைச் சந்திச்சு, என்ன செய்யிறது?

முயல்:- அவரோடை கதைப்பம்

பன்றி:- என்னத்தைக் கதைக்கிறது?

முயல்:- எங்களைக் கலைச்சுப் பிடிக்க வேண்டாம் எண்டு.

நரி:- "அப்ப நான் சாப்பாட்டுக்கு என்ன செய்யிறது" எண்டு சிங்கம் கேக்கும்.

முயல்!- அவருக்கு நாங்கள் ஒரு வழி சொல்லுவம்.

மான்:- என்ன வழி?

முயல்;- ஒரு நாளைக்கு ஒரு ஆள் சிங்கத்திட்டைப் போவம்.

குரங்கு;- போய்?

முயல்:- அவருக்குச் சாப்பாடாகுவம்

எல்லோரும் :- ஐயோ!!......

நரி;- நாங்களாய்ப் போய்ச் சாகிறதோ?!
நல்ல கதை இது!!

பன்றி:- கொலைக்குப் பதிலா தற்கொலை செய்யச் சொல்லுறீர்.

முயல்:- ஒரு நாளைக்கு நாலு, அஞ்சுபேர் சாகிறதைவிட ஓர் ஆள் வீதம் சாகிறது லாபந்தானே.

(வளரும்)

# எதிரொலி!

அங்கம் II

எதிரொலி உண்டாவதற்குரிய ஏதுக்கள் எவை என்பது தெரியுமா? என்று மாமா கேட்கின்றார்.

அது அவர்களைக் கேட்ட கேள்வி அல்ல, அவர் அவற்றை விளக்கப் போகின்றார் என்பது ரவிக்கும், வேணிக்கும் தெரியும். அவர்கள் பேசாது இருக்கின்றார்கள்.

''எங்கள் காதிலே கேட்கும் ஒரு ஒலி தொடர்ந்து பத்திலொரு செக்கனுக்குக் கேட்கும். விழித்திரையிலே விழும் விம்பம் இருபத்திநாலிலொரு செக்கனுக்கு அழியாது இருப்பது போலவே செவிப்புலனிலும் அழியாதிருக்கும் தன்மையுண்டு. ஒருசத்தம் கேட்டுப் பத்திலொரு செக்கனுக்குள் இன்னுமொரு ஒலி வந்து சேருமானால் அது வேறொரு ஒலியாகக் கேட்கமாட்டாது. இரண்டும் சேர்ந்து ஒன்றாகவே கேட்கும். தனித்தனிச் சத்தங்களாகிய எழுத்தொலிகள் வார்த்தைகளாக வசனங்களாகக் கேட்பது இதனாலேயே' என்று குமாரசுவாமி கூறுகின்றார்.

ஒலி உண்டாகிய இடத்தில் இருந்து செல்லும் ஒலி எங்கேயாவது பட்டுத்தெறித்து மீண்டும் பழைய இடத்தை அடைவதற்குள் இந்தத் தூரத்தைக் கடந்து இருந்து வேண்டும். உற்பத்தியகும் இடத்துக்கும் தெறித்து அனுப்பும் கட்டிடத்திற்கும் குறைந்தது ஐம்பந்தைந்து அடி வெளி இருக்குமானால் இந்த நேரம் கடந்துவிடும்' என்று ஒலி உண்டாகும் இடத்துக்கும் தெறிக்கும் இடத்துக்கு இருக்க வேண்டிய தூரத்தை ஒரு கணிப்பு மூலம் கூறுகின்றார்.

'ஐம்பந்தைந்து அடிவெளி இருந்தாற் போதுமா?' என்று வேணி கேட்கின்றாள்.

'ஆம் போதுமே போக ஐம்பத்தைந்து, வர ஐம்பத்தைந்து எல்லாமாக நூற்றிப்பத்து சரிதானே இதுதான் இரண்டு இடங்களுக்குமிடையே இருக்கவேண்டிய குறைந்தளவு தூரமாகும். இனி ரவி கூறினானே, ஒலி பெருக்கியிலே பேசியபொழுது எதிரொலி நன்கு கேட்டதாக அதுவும் ஒரு ஏது என்று கூறவேண்டும். இங்கிருந்து செல்லும் ஒலி திரும்பிவரும் பொழுதும் கேட்கத்தக்கதாக இருப்பதற்கு அதற்குப்போதிய சக்தி வேண்டும். சக்தி போதியளவு இல்லாவிட்டால் திரும்பி வரும் ஒலியானது செவிப்புலனுக்குக் கேட்காதிருக்கக் கூடும் போய்வந்ததிலே சிதைந்துவிட்டால் எதிரொலி உண்டாகாது இரண்டு ஏதுக்களைத்தான் குறிப்பிடலாம்.

ஒன்று உற்பத்தித்தானத்திற்கும் தெறிக்கும் இடத்திற்கும் இடைத்தூரம். இது குறைந்தது ஐம்பத்தைந்து அடியாவது இருக்கவேண்டும். மற்றது, உண்டாகும் சத்தம் போதிய சத்தியுடன் செல்ல வேண்டும். மெதுவாகக் கதைத்தால் எதிரொலி உண்டாகாது. பெரிய குரல் வைக்க வேண்டும் அல்லது ரவி கூறியது போல ஒலிபெருக்கி

# எதிரொலி!!

தேவை' என்று குமாரசுவாமி எதிரொலி உண்டாவதற்கு வேண்டிய ஏதுக்களைக் கூறினார்

'மெதுவாகக் கதைத்தால் தெறிக்கும் இடத்தைப் போய்ச் சேருகின்றதோ என்பதே சந்தேகம். முற்றவெளியில் கூட்டங்கள் வைக்கும் பொழுது ஒலி பெருக்கி அதற்காகத்தானே பூட்டுகின்றார்கள். ஒலி அதிக தூரத்துக்குச் செல்வதற்கிடையிலே அது மங்கிப்போகக் கூடும்' என்று ரவி கூறுகின்றான்.

''முற்றவெளியில் நின்று பேசுவதைவிட ரவுண்ஹோலிலே இலகுவாகப் பேசலாம் ஒலிபெருக்கி இல்லாமலே கூட்டத்தை நடத்தலாம்'' என்று வேணி கூறுகின்றாள்.

''ஆம் மாமா திறந்தவெளியிலே கூட்டம் வைப்பதைவிட ஒரு மண்டபத்திற்குள் கூட்டம் வைப்பது நல்லதுதான் ஒலிபெருக்கி இல்லாமலே கேட்கக்கூடியதாக இருக்கும் அது ஏன்? மாமா'' என்று ரவி கேட்கின்றான்.

திறந்த வெளியிலே உண்டாகும் ஒலியானது அது சிதைந்து போகும் மட்டும் நாலாபக்கமும் பரந்து செல்கின்றது. மண்டபத்திலே அது அப்படிச் செல்லமுடியாதே. மண்டபத்தின் சுவர்கள் கூரை ஆகியவற்றின் உதவியாலேயே கடைசிவரியிலே இருப்பவர்கள் ஒலியைக் கேட்டுக் கொள்

# நாணயத்தின் வரலாறு

இப்போது நாம் பொருட்கள் வாங்க உதவுவது நாணயம் அல்லது பணம். பணம் என்ருல் பிணமும் வாய் திறக்கும் என்பது பழமொழி . அப்படிப் பணம் மக்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது ஒரு பொருளின் பெறுமதியை அளப்பது பணம் ஆரம்ப காலத்தில் நாணயம் என்று வழங்கப்பட்டது இந்த நாணயம் தோன்றியவிதம் மிகவும் சுவையானது.

கி. மு ஏழாம் நூற்றண்டளவில் லிபியா, சீனு, இந்தியா போன்ற நாடுகளில் வாழ்ந்த மக்கள் பண்டங்களை வாங்கவும் விற்கவும் உலோகத் துண்டுகளைப் பயன்படுத்தினர்கள். இத்தகைய உலோகத்துண்டுகள் சிலவற்றில் இரு புறமும் சில அடையாளங்கள் இடப்பட்டிருந்தன இந்தப் புராதன நாணயங்கள் பல்வேறு உருவ அமைப்புக்களைக்கொண்டவை.

லிபிய தேச நாணயங்கள் தங்கமும் வெள்ளியும் கலந்த உலோகத்திஞல் ஆக்கப்பட்டிருந்தன. சீனர்கள் தங்கள் நாணயங்களை கத்தி வடிவில் வெண்கலத்தால் உருவாக்கியிருந்தனர் இந்திய நாட்டின் பண்டைய நாணயங்கள் வெள்ளித் தகடுகளால் பல்வேறு அமைப்புடன் விளங்கின கி மு 5ம் நூற்றுண்டளவில் பல்வேறு பல நாடுகளும் தங்களுக்குள் வியாபாரம் செய்ய நாணயங்களைப் பயன்படுத்தலாயின

அகில உலகப் புகழ் வாய்ந்த நாணயங்கள் வட்ட வடிவில் தான் இருக்க வேண்டுமென சீனர்கள் முடிவு செய்தனர். ஆகவே கி. மு 300ஆம் ஆண்டளவில் சீனர்கள் வட்ட வடிவில் நாணயங்களை வார்த்து வெளியிட்டனர் அன்றிலிருந்து இன்றுவரை சீன நாட்டு நாணயங்கள் வட்டவடிவிலேயே உள்ளன. மற்ற நாடுகளும் கொஞ்சம் கொஞ்சமாக நாணயங்களை வட்ட வடிவில் வார்த்து வெளியிட்டன. இவ்வாறு ஆரம்பித்த நாணயப் புழக்கம் இன்று உலகையே ஆக்கிரமித்து நிற்கின்றது.

— தி. தவபாலன் —


# பெற்றேருக்கு நன்றி கூறும்

நெருக்கடியான சூழ்நிலையிலும் கடந்த வருடம் 1987 நடைபெற்ற ஸ்ரீலங்கா இராணுவக் கெடுபிடிகளின் மத்தியிலும் நான் பரீட்சையில் அதிசிறந்த மாணவனுகத் தெரிவு செய்யப்பட்டதற்கு உறுதுணையாக அமைந்தவர்கள் எனது பெற்றேர்.

பாடசாலை விடுமுறைக் காலமானதால யாழ் மாவட்டத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் அதிசிறந்த புள்ளிகளை — 191 புள்ளிகள் — பெற்று முதல் மாணவனுக மாவட்ட ரீதியில தெரிவான ஹாட்லிக் கல்லூரி மாணவனைப் பேட்டி காண்பதற்காகபருத்தித்துறை ஆத்தியடியில் உள்ள அவரது வீட்டிற்குச் சென்றேன். 'அர்ச்சுனு'' சிறுவர் சஞ்சிகைசார்பாக பேட்டி கண்டபோது ஸ்ரீ கஜேந்திரன் இப்படிச் சொன்னுர்.

பாடசாலையின் ஆரம்பக் கல்வியை பருத்தித்துறை வட இந்துமகளிர் கல்லூரியில் கற்ற மாணவன் ஸ்ரீஸ்கந்தராசா ஸ்ரீகஜேந்திரன் ஐந்தாம் வகுப்பில் இருந்து ஹாட்லிக் கல்லூரியில் படிப்பை மேற்கொண்டார்.

## சாதனை செய்த சிறுவன்



அவருடைய பொழுது போக்கு பத்திரிகைகள் சஞ்சிகைகளைப் படிப்பதும் பழைய முத்திரைகள் பழைய நாணயங்கள் சேர்ப்பதுமாகும் இதற்கு ஆத்தியடியில் அமைந்திருக்கும் நூல் நிலையம், கல்லூரி நூல் நிலையம் அவருக்குப் பெரும் துணை புரிவதாகக் கூறினார்.

எனது முயற்சியில் எனக்குப் பூரண நம்பிக்கை என்றுமே உண்டு ஆனால் சிறந்த மாணவனாக தெரிவு செய்யப்பட்டதை பத்திரிகைகள் மூலமாகவே அறிந்து சந்தோசப்பட்டேன். அதற்கு முதல் காரணகர்த்தாவான எனது பெற்றோருக்கும் எனது பாடசாலை, தனியார் கல்வி நிலைய ஆசிரியர் அதிபர்களுக்கும் எனது நன்றி.

என்போன்ற முயற்சியுடைய சிறுவர்களுக்கு ஊக்கந் தந்து அறிவுக் களஞ்சியங்களை அள்ளித்தரும் அர்ச்சுனாவை நான் பாராட்டுகிறேன் என்றும் கூறினார்.

பேட்டி : சுந்தரலிங்கம்

# மழை தந்த பயம்

**செல்வன். இராசேந்திரன்**
யாழ் இந்துக் கல்லூரி

எங்கும் கனத்த இருள் மண்டிக்கொண்டிருக்கிறது. வானத்திலே பெயருக்கு கூட நட்சத்திரமில்லை இருண்ட மேகத்தால் அது முற்றாக விழுங்கப் பட்டு விட்டதோ. இருந்து இருந்து மின்னல் மேகத்தின் வயிற்றை கிழித்துக்கொண்டு வெளிவருகின்றது. கண்களை குருடாகி விடும்போல இருக்கிறது இடிமுழக்கம் காதுகளை செவிடாக்குகிறது இன்னும் சிறிது நேரத்தில் மழை சோனாவாரியாக பொழியத் தொடங்கி விடும். செந்தூரனுக்கு பயத்தால் நெஞ்சு படபடக்கிறது.

அன்றைய மழையின் அழிவை நினைத்தால் செந்தூரன் பயந்துவிடுவான். அன்று மழை ''சோ'' வெனப் பெய்தது. இடிமுழக்கம் காதை செவிடுபடுத்தியது. மின்னல் கண்களைக் குருடாக்கி விடுமோ என்று நினைத்தான். மரங்கள் விழுந்தன மின்வயர்கள் எல்லாம் அறுந்து தெருவில் கிடந்தன. செந்தூரனின் வீட்டுக்காரர்கள் மழையினால் நடுங்கினார்கள்.

இடிகள் முழக்கங்கள் வளவில் சரமாரியாக விழுந்தன. மறுபக்கம் மிருகங்களின் கூச்சலும் ஒலியும் கேட்டது செந்தூரன் பயத்தால் நடுங்கினான். அந்த ஊரே வெள்ளமாக நின்றது. மழையோ விடுவது போல் இல்லை. இடிமுழக்கமும் ஓயவில்லை.

மழையின் கொடூரம் மக்கள் எல்லோரையும் பயமுறுத்தியது. தெருவைக் கூட பார்க்க முடியாதநிலை. போட்டியில் கைதட்டுபவர் கைதட்டியவாறு மரங்கள் விழுந்தன. வெள்ளம் ஆறுமாதிரி தெரு, வளவு போன்ற இடங்களில் பாய்கிறது. உதாரணமாக சொல்லப் போனால் ஒருமைதானம் போல் காட்சியளித்தது.

மழையோ நின்றபாடில்லை மக்களோ அஞ்சுகின்றனர். இடிமுழக்கமும் தொடர்ந்து முழங்

(25ம் பக்கம் பார்க்க)

# பிறர் கஷ்டம் போக்கு

— உஷா —




ஒரு சமயம் பசுவொன்று சதுப்பு நிலத்தில் சிக்கிக்கொண்டது. தன்னை அதில் இருந்து விடுவித்துக் கொள்ள அரும்பாடுபட்டது. ஆனால் அச்சதுப்பு நிலம் அப்பசுவை சிறுகச் சிறுக மூழ்கடித்துக் கொண்டு இருந்தது.

சில சிறுவர்கள் அவ்வுயிர் போராட்டத்தை சந்தோஷத்துடன் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தார்கள். அந்தச் சமயம் அவ்வழியில் சென்று கொண்டிருந்த ஒரு துறவி, நெருக்கடி நிலையில் இருந்த பரிதாபத்துக்குரிய பசுவைப் பார்த்தார்.

வேறு நினைவு வரும்முன் சதுப்பு நிலத்தில் குதித்து தனது வலிமை பொருந்திய தோள்களினால் பசுவைத் தூக்கி கரை ஏற்றினார். பின் அமைதியாகத் தன் பயணத்தை மீண்டும் தொடங்கினார்.

அந்தச் சிறுவர்களோ தங்கள் வேடிக்கை விளையாட்டைக் கெடுத்ததற்காகத் துறவியை ஏளனம் செய்தனர்.

முட்டாள் தனமாக உயிரைப் பணயம் வைத்து அந்தப் பசுவை ஏன் காப்பாற்றினாய் . ? என்றார்கள்.

நான் பசுவிற்கு உதவி செய்யவில்லை, எனக்கு நானே உதவி புரிந்து கொண்டேன். அந்தப் பசுவின் வேதனை என் உள்ளத்தை உறுத்தியது. என் உள்ளத்துக்கு ஆறுதல் தேட அப் பசுவைக் காப்பாற்றுவதைத் தவிர வேறு ஒன்றும் எனக்குத் தோன்றவில்லை இப்போது நான் மகிழ்ச்சியுடையவனாக உள்ளேன்'' எனத் துறவி பதிலளித்தார்.

பிறர் கஷ்டப்படுவதை நீங்கள் காணும் போது அக்கஷ்டத்தை உங்களுடையதாகவே உணர்ந்து அதை நீக்குவதற்காகப் பாடுபடுங்கள். இரக்க மனப்பான்மையை வளருங்கள் அதுதான் மிகச் சிறந்த சாதனை.

---

கின்றார்கள்'' என்று குமாரசுவாமி கூறுகின்றார்

''அப்படியானால் மண்டபத்துக்குள்ளும் எதிரொலி உண்டாகின்றது என்று சொல்லுங்கள்'' என்று வேணி சொல்கின்றாள்.

''அதை எதிரொலி என்று சொல்வதா? எதிரொலி என்றால் கூறிய வசனங்கள் அப்படியே கேட்க வேண்டுமே? என்கிறான் ரவி – அவன்தான் எதிரொலிக்கு வரைவிலக்கணம் கொடுத்தானே.

''ரவி சொல்வது சரிதான் இதனை ஒலிநீடிப்பு என்று சொல்வோம். எதிரொலியாக இருக்குமானால் அது ஒரு தொல்லையையே தரும். ஒருவர் பேசுவதை எதிரொலியும் சேர்ந்து கொண்டால் எப்படி கேட்க முடியும்? என்று குமாரசுவாமி கூறினார்.

''ஆம் மாமா அது எதிரொலி இல்லை. ஒலிநீடிப்பு என்று வைத்துக் கொள்வோமே'' என்று அவன் குசினிப்பக்கம் பார்த்துக்கொண்டு குரலைத் தாழ்த்தி, ''அம்மா சில வேளைகளிலே கதைத்தாள் என்றால் வீடு கிடுகிடுக்குமே'' என்கிறான்.

''இதைக் கேட்டாளென்றால் இப்பொழுதே ஒருதரம் கிடுகிடுக்கும்'' என்று கூறிய மாமா, ''இந்த ஒலிநீடிப்பு கூட பிரச்சினையைத்தரும்'' என்று சொல்கின்றார். குமாரசாமி எதையோ கூறப்போகிறார் என்பது விளங்குகின்றது.

அதற்கிடையில் வேணி ''கோவில்களிலே காகங் கத்தும்பொழுது ஒரு விதமான சத்தமுண்டாகும். அதுவும் இந்த நீடிப்பினாலே என்று நினைக்கின்றேன்'' என்று கூறுகின்றாள்.

-வளரும்-

# உங்கள் நோக்கு

நம் நகரில் சிறுவர்க்கென ஒரு மாத இதழ் வருவதை எண்ணி மகிழ்கின்றேன். புத்தகக்கடையில் தொங்கிய அர்ச்சுனு இதழைக் கண்ணுற்றேன்.

எங்கே வர்ண அட்டையில் இந்தியாவிலிருந்து வருகிறதே என நினைத்தேன். இந்தியாவிலோ இப்படியொரு புத்தம் வந்ததில்லை. ஆனாலும் வாங்கிப்பார்ப்போம் என நினைத்து 5 ரூபாவை கடைக்காரரிடம் நீட்ட மீதி 1 ரூபாவுடன் அர்ச்சுனு கைக்குவந்ததும் புரட்டினேன்.

நாட்டுத் தயாரிப்பு என வியந்தேன் பயனளிக்கும் ஆக்கங்கள் அறிவூட்டும் அம்சங்கள் படிப்பினை ஊட்டும் கதைகளைக் கண்டேன்.

அர்ச்சுனுவை ஈழம் முழுதும் வாழும் தமிழ்ச்சிறுவர்கள் படிக்கச்செய்து ஈழத்தேசிய சிறுவர் மாத இதழாக மாற்றிவிடுங்கள்.

**தி. தவபாலன்**
78 நாயன்மார் வீதி
நல்லூர்
யாழ்ப்பாணம்.

எண்சிலம்பம் பகுதியில் மூவருக்காக எங்கள் அதிஷ்டத்தை சோதிக்க வேண்டாம் குறித்ததோர் தொகையை பரிசுப்பணமாக அறிவித்து அதனை சரியான விடையை அனுப்பியோரின் எண்ணிக்கையால் பிரித்து அவர்களுக்கு வழங்கக் கூடிய அர்ச்சுனு இதழ்களை வழங்கவும்.

அர்ச்சுனுதான் எமக்கு அதி பரிசு கிடைத்தது போல் இருக்கும்.

**வி சி சிபாஸ்கரன்**
புளியங்கூடல் தெற்கு
ஊர்காவற்றுதற.

அர்ச்சுனுவில் வெளிவரும் எங்களுக்கும் காலம் வரும், விடுகதைகள், நாளிலும் பொழுதிலும் விஞ்ஞானம், இருயப்பானியத் தயாரிகள் போன்றன எம்போன்ற சிறுவர்களை மென்மேலும் கவர்ந்துள்ளன.

**ப சிறீகாந்தராசா**
மண்டான்
கரணவாய் மேற்கு
கரவெட்டி.

''அர்ச்சுனுவை'' முதல் இதழில் இருந்து நான்காவது இதழ் வரை வாங்கிப் படித்து வருகின்றோம். அர்ச்சுனுவில் வெளிவரும் அனைத்து அம்சங்களும் வெகுபிரமாதம்.

கணணி நிகழ்ச்சித் திட்டத்தை தொடர்ந்து வெளியிடவும்.

குட்டி மாமா தரமான கதை, அக்கதையை நாம் புத்தகமாகக்கட்டுவதற்கு வசதியாக தொடரந்தும் நடுப்பக்கத்தில் வெளியிடவும்.

எண் சிலம்பம் சஞ்சீவியில் வெளிவரும் சொற்சிலம்பத்தைப் போல் எம்மை சிந்திக்க வைக்கின்றது.

சிறுவர் வட்டத்தில் சேர்வதற்கூப்பன் இரண்டைஒவ்வொரு அர்ச்சுனுவிலும் வெளியிடவும். ஒருபக்கத்தையாவது நகைச் சுவைக்காக ஒதுக்கவும். தொடர்கதைகளுக்கு முன்கதைச் சுருக்கம் வெளியிடவும்.

அர்ச்சுனுவை இனிமேலாவதுதொடர்ந்துவெளியிடவும் அர்ச்சுனுவின் இலக்கியப்பணி தொடர கிருஷ்ணபராத்மாவைப் பிரார்த்திக்கின்றோம்

| இங்ஙனம்' | ஆண்டு |
|---|---|
| தேவ- முகுந்தன் | 10 |
| தே- செந்தூரன் | 8 |
| தேவ- நிர்மலன் | 7 |
| தே- குருபரன் | 3 |
| தே- ஜங்கரன் | 2 |
| தி- காயத்திரி | 5 |
| தி- திருமகள் | 4 |

''நாயகி வாசா''
15, 3ம் குறுக்கு வீதி
கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்.



# தாயின் சொல்லை மீறிய அணில்

திருமதி அணிலாரே! எனக்குச் சுகமில்லை. நான் டாக்டரிடம் போகிறேன். தனியாகப் போக விரும்பவில்லை. நீரும் கூட வருகிறீரா? – இப்படிக் கேட்டார் திருமதி முயலார்.

"நான் கூட வருகிறேன். எனது மகன் அவ்வளவு தூரம் வரமாட்டான். நான் அவரை வீட்டில் இருக்கச் சொல்வேன்."- இவ்வாறு பதில் கூறியது திருமதி அணிலார்.

திருமதி அணிலார் தனது மகனை அணில் குஞ்சைக் கூப்பிட்டார். "நான் திருமதி முயலாருடன் வெளியே செல்கிறேன். நான் வீடு திரும்பும்வரை வீட்டிலே தங்கி இரு. வெளியே செல்லாதே. மரத்தில் இருந்து கீழே இறங்காதே. பிடிபடுவாய்" -என்று திருமதி அணிலார் எச்சரிக்கை செய்தார். தாயார் சென்ற பின்னர் சில மணிநேரம் வீட்டில் இருந்த அணில் குஞ்சு மெதுவாக வெளியே எட்டிப் பார்த்தது. அதன் நண்பர்கள் விளையாட அழைத்தார்கள். அம்மாவின் கட்டளையை நண்பர்களுக்கு எடுத்துச் சொன்னது.

"சொற்ப நேரம் விளையாட வா. பின்னர் கூட்டுக்குத் திரும்பிச் செல்லலாம். அம்மாவுக்குத் தெரியமாட்டாது" – இப்படி நண்பர்கள் கூறினார்கள். நண்பர்கள் சொன்னதை நம்பி விளையாடச் சென்றது.

அப்போது அணில் குஞ்சு ஒரு பெரிய மரத்தைக் கண்டது. அம்மரத்தில் பெரிய காய்கள் இருப்பதைக் கண்டது. "இவ்வளவு பெரிய காய்கள் எமக்குக் கிடைத்தால் அம்மாவுக்கு எவ்வளவு ஆறுதல். பல நாட்கள் உணவு தேடி அம்மா அலைய வேண்டியதில்லை" என்று நினைத்தது. அந்தக் காய்களைப் பறிக்க முயன்றது. முடியவில்லை. மரத்தில் இருந்து இறங்கி வந்தது. அப்போது அங்கு நின்றார் பூனையார். அவர் அணில்குஞ்சைத் துரத்தினார்.

அணில்குஞ்சு மீண்டும் மரத்தின்மீது பாய்ந்து ஓடியது. பூனையும் அதனைத் துரத்தியது. அப்போது மரத்தில் இருந்த பழுத்த காயைக் கையில் எடுத்தது. பூனைமீது வீசியது. பூனை கீழே விழ்ந்தது.

இருப்பினும் அணில் குஞ்சு கீழே இறங்கும் வரை பூனை காத்திருந்தது. இப்படி மூன்று மணித்தியாலங்கள் ஓடிச் சென்றன. தாய் சொல்லைத் தட்டி வந்த கஷ்டத்தை நினைத்து வருந்தியது அணில்.

அணிலின் நண்பர்கள் தாயாரிடம் இதனைச் சொல்ல அது நண்பர்களுடன் மரத்தடிக்கு விரைந்து வந்தது. அதனைக் கண்ட பூனையார் ஓடித் தப்பினார்.

தாயிடம் நடந்ததைக்கூறியது அணில் குஞ்சு. "இது தென்னை மரம். இதன் காய் தேங்காய். அதனை நாம் உண்பதில்லை. இனிமேல் இம்மரம் மீது ஏறாதே" என்று தாய் ஆலோசனை கூறியது.

—நன்றி "மிரர்"

## தாய் சொல்லைத் தட்டாதே

# கண்ணீர்ப் பூக்கள்

செல்வி. பசுபதிப்பிள்ளை
யாழ் இந்துமகளிர் கல்லூரி

"காலம் என்பது கறங்கு போற் சுழன்று மேலது கீழாம் கீழது மேலாம்" என்ற மனோன்மணீய நாடக அடிகளை செல்வி நினைத்துக் கொண்டாள் மூன்று வருட இடைவெளிக்குப் பின்பு ஊர் திரும்பிய அவளுக்கு ஊரின் மாற்றங்களைக் காண வியப்பாக இருந்தது பேருந்துகளே எட்டிப்பார்க்காத மண்வீதிகள் தார் வீதிகளாகி அதன் மேல் கார்களும் மினிவான்களும் பவனி வந்து கொண்டிருந்தன. ஊரெல்லையில் ஐயனார் கோவிலின் உச்சிக் கோபுரம் தெரிந்தது. இவற்றைப் பார்த்து விட்டு சிறிது நேரத்தின் பின் நடக்கத் தொடங்கினாள் செல்வி.

அவள் ஒரு வைத்தியர் அவளுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட வீடு வைத்தியசாலைக்கருகில் இருந்தது. மூன்று வருடங்கள் கண்டியில பணியாற்றி விட்டு மீண்டும் தனது ஊருக்கே மாற்றலாகி வந்திருந்தாள் செல்வி. கையில் பெட்டியுடன் நடந்து வந்தவளை மதில் மேலால் பல விழிகள் எட்டிப் பார்த்தன. பழகிய முகங்கள் குசலம் விசாரித்தன. அவர்களைப் பார்த்துப் புன்னகையொன்றை உதிர்த்து விட்டு நடந்தாள். வீட்டை அடைந்ததும் பெட்டியை வைத்து விட்டு முகத்தை அலம்பிக் கொண்டு தேநீர் குடித்தாள்.

மறுநாள் வாசல் கதவைத் திறந்த செல்வியின் மீது சில்லென்ற பனிக்காற்று வீசியது. எட்டு மணிக்கு வைத்தியசாலைக்குப் போகவேண்டும். என்ற நினைவு உந்தவே அவசரமாகக் காலைக்கடன் களை முடித்த பின் சமையலைச் செய்தாள். பாதையோரத்தைப் பார்த்தவாறே வைத்தியசாலையை நோக்கி நடந்தாள் அவளை எதிர்பார்த்தவர்கள் போல் இருந்தனர் அனைத்து ஊழியர்களும், மருத்துவ தாதி ஒருத்தி அவளை இன்னொரு வைத்தியரிடம் கூட்டிச் சென்றாள். அவர் அவளுக்கான வேலைகளை அவளிடம் ஒப்படைத்தார். தனது வார்டை நோக்கி நடந்தாள் செல்வி. அறையினுள் அவள் நுழையவும் தாதி ஒரு ஃபைலைக் கொண்டு வரவும் சரியாக இருந்தது.

"டாக்டர் இது இருபதாம் அறை நோயாளியின் ஃபைல்" என்று கூறி வைத்து விட்டுச் சென்றாள். ஃபைலைப் பார்த்த செல்வி அந்த நோயாளியான சங்கருக்கு இறக்கும் நாள் வெகு தூரமில்லை என அறிந்தாள். நோயாளியைப் பார்வையிட இருபதாம் அறைக்குச் சென்றாள். அறையினுள் காலடி வைத்தவள் திடுக்கிட்டாள்.

யாரோ ஒரு சங்கரை நினைத்துச் சென்றவள் தன்னுடைய சங்கரைக் கண்டு அதிர்ந்தாள் சங்கரும் அவளைப்பார்த்தான் கண்கள் கலந்தன. கண்ணீர் முத்துக்கள் சொரிந்தன. சங்கரின் கால் பக்கம் உட்கார்ந்திருந்த அவன் மனைவி சுமதி டாக்டரைப் பார்த்ததும் எழுந்து வெளியே சென்றாள். செல்வியால் நெடுநேரம் அங்கு நிற்கமுடியவில்லை. கடமையை முடித்துக் கொண்டு வெளியே வந்தாள். அன்று முழுவதும் அவளால் நிம்மதியாக வேலை செய்ய முடியவில்லை

மாலை வீடு திரும்பியதும் வானொலியைத் திருகி விட்டு கட்டிலில் விழுந்தாள் சேதனைமேல் சோதனை என்ற பாடல் வானொலியில ஒலித்துக் கொண்டிருந்தது செல்வியின் நினைவலைகள் அவளை எங்கெங்கோ இழுத்துச் சென்றன அவை அவளை ஐந்து வருடத்துக்கு முன் இழுத்து சென்றன,

அன்று செல்வி பல்கலைக்கழகத்தில் மருத்துவபீட மாணவி சங்கர் நுண்கலைப் பிரிவில சங்கீதம் பயின்று கொண்டிருந்தான் அவனுடைய பாட்டுக்கு ரசிகையான செல்வி நாளடைவில் அவன் காதலியானாள். செல்விக்கு பன்னீர்ப் பூக்கள் என்றால் கொள்ளை ஆசை. ஒரு நாள் சங்கரிடம் கேட்டாள். மறுநாள் கொண்டு வந்து தருவதாகக் கூறிச்சென்றவன் மீண்டும் வரவேயில்லை.

மாதம் ஒன்று முடிந்தது. ஊரிலே சங்கரின் தங்கையின் திருமணத்திற்காக அவன் தந்தை ஊர்ப் பெரியவரான கனகலிங்கத்திடம் ஏகப்பட்ட கடன் வாங்கி

(24 ம் பக்கம் பார்க்க)

# கணிதப் புதிர்

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | 24 | 7 | 20 | 3 |
| 4 | 21 | 25 | 8 | 16 |
| 17 | 5 | 13 | 21 | 9 |
| 10 | 18 | 1 | 14 | 22 |
| 23 | 6 | 19 | 2 | 15 |

25 சிறு சதுரங்கள் கொண்ட இச் சதுரத்தில் எந்தப் பக்கத்திலும் எண்களைக் கூட்டி வரும் தொகை 65 ஆகும்.

$13 \times 5 = 65$

ஆக்கம்– எஸ். ஆர். பேரின்பநாயகம்

## உங்களுக்குத் தெரியுமா?

பொது அறிவு (விலங்கியல்)- வினு விடை

1. வயது வந்த மனிதனின் இருதயம் நிமிடத்துக்கு 72 முறையும், குதிரையின் இருதயம் 44 முறையும் துடிக்கின்றன யானையின் இருதயம் நிமிடத்திற்கு எத்தனை முறை துடிக்கிறது?
   35 முறை
2. வெள்ளைக் குருதிக் கலங்களின் வேலை என்ன?
   நோய்க்கிருமிகளை ஒழித்தல்
3. கோழிக்குஞ்சின் உடலின் எப்பகுதி நுண்ணலை வீச்சை உணர்கிறது?
   வால்பகுதியில் உள்ள இறகுகள்
4. உயிரினங்களில் மூளைக்காய்ச்சலை உண்டாக்கும் கிருமிகளின் களஞ்சியமாக விளங்குவது எது?
   பன்றி
5. பெரும்பாலோரின் இரத்தம் O, A, B.A, A, ஆகிய இரத்த வகைகளில் எந்த வகையைச் சேர்ந்திருக்கிறது?
   O வகை
6. ஓர் ஆமையின் நீண்டகால ஆயுள் சராசரியாக எத்தனை வருடங்களுக்கு இருக்கும்?
   150 வருடங்கள்.
7. பறவைகளில் அதிக நாட்கள் உயிர்வாழக்கூடியது எது?
   கழுகு
8. காசநோய் உடலின் எந்தப்பகுதியைப் பொதுவாகப் பாதிக்கிறது?
   நுரையீரல்
9. கஸ்தூரி மான்களில் எந்த மானுக்கு பல்லும் கொம்பும் கிடையாது?
   பெண்மானுக்கு
10. மிகப் பெரிய நீலத் திமிங்கிலத்தின் எடை எவ்வளவு?
   180,000 கிலோ கிராம்கள்.

சிறுமியரே

நீங்கள் கோலம்
டாமா? நமது பாரம்
அது. எனவே "கோல
தியை ஆரம்பிக்கின்றே
ருது தொடர்ந்து வெ

படத்தின் கீழே
படும் பொருட்கள், கே
ஆகிய விபரங்கள் தர
கிச் சேகரியுங்கள். உ
படும்.

பாடப்பயில வேண்
மரபு அல்லவா
பில்வீர்'' என்ற பகு
மாதந்தோறும் தவ
ாகும்.

ம் போடத்தேவைப்
ந்தின் அளவு, நிறம்,
ம். இவற்றை நறுக்
ளுக்கு நன்கு பயன்

— ஆசிரியர் —



# கோலம் பயில்வீர்

பழைய காலத்தில் வீடுகள் அநேகமாக மண்சுவர்களினுல் கட்டப்பட்டு எளிமையாக இருந்தன.

காற்றினுல் தூசியும் மண்ணும் வீட்டினுள் நுழைந்து அசுத்தமாகி விடக்கூடாது என்பதற்காக வீட்டின்முன் சாணம் பூசி சமன்படுத்தினுர்கள்.

சாணத்தால் மெழுகப்பட்ட தரையை அழகுபடுத்திப்பார்க்கும் எண்ணமே கோலம்போடுவதற்கு அத்திவாரமாக அமைந்தது.

மெழுகப்பட்ட தரையில் வெள்ளை அரிசி மாவினுல் புள்ளிகள் வைத்துக் கோலங்கள் போடப்பட்டன.

நாளடைவில் இது விரிவடைந்து பூக்கோலம், தேங்காய்ப்பூ கோலம், எனப் பலவகைக் கோலங்கள் உருவாகின.

விஷேச காலங்களில் நாம் உண்டு உடுத்து மகிழ்ச்சியாக இருப்பது போல எறும்பு, அணில், காக்கை குருவி குஞ்சுகளும் வந்து உண்ணவேண்டும். மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்ற தார்மீக எண்ணமே ஆகும்.

புள்ளிக்கோலம் என்ருல் கரைத்த அரிசி மாவினுல் புள்ளிகளை இட்டு போடும் கோலமாகும்.

படத்தில் உள்ளது போல 'ஓம்' என்ற கோலத்தை வரைவது எப்படி என்று பார்ப்போம்.

முதலில் உங்களுக்குத் தேவையான அளவுடைய வட்டத்தைக் கோலம்போடும் இடத்தில் வரைந்து கொள்ளுங்கள்.

ஒரு நூலின் நுனியில் 'சோக்' துண்டு ஒன்றைக் கட்டி அதன் மறுநுனியை கோலம் போடப்போகும் தரையின் மத்தியில் இறுக ஒருவர் பிடித்துக்கொண்டு மற்றவர் 'சோக்' கட்டியின் முனையை வட்டமாகச் சுற்ற அழகான வட்டம் வந்துவிடும்.

அதற்குள் 'ஓம்' என்ற எழுத்தை எழுதவும். ஓம் என்ற எழுத்துப் பகுதிக்கு பிழிந்த பால் எடுத்த தேங்காய் பூவில் மஞ்சள் வர்ணப் பொடியைக்கலந்துபோடவும்.

மற்றப் பாகங்களுக்கு கரும் பச்சை கலந்த தேங்காய்ப் பூவைப் போடவும்.

இது தேங்காய்பூ கோலம் போடும் முறை;

இதுபோல பூக்கோலமும் போடலாம். தேங்காய்ப் பூவுக்கு பதில் மஞ்சள் நிறப் பூக்களின் இதழ்கள் அதாவது செவ்வந்தி, மஞ்சள் செவ்வரத்தை போன்றவற்றின் இதழ்களை உதிர்த்து, பெரிதாக இருந்தால் வெட்டி சிறிதாக்கி ஓம்' என்ற பகுதியில் போடலாம்.


மிகுதிப் பகுதியில் செவ்வரத்தை இலைகளைப் பிடுங்கி சிறிதாக வெட்டி கரும் பச்சை நிறமுள்ள பகுதிகளில் போடலாம். இது பூக்கோலமாகும்.

மங்களகரமாக இருப்பதற்கு கோலத்தின் நான்கு முனைகளிலும் சிட்டி விளக்கு ஏற்றலாம்.

இந்தக் கோலம் தீபாவளி' நவராத்திரி போன்ற பண்டிகைக் காலங்களுக்கு உகந்தது.

# சமயமும் அறிவியலும்

**சமயம் நொண்டி, விஞ்ஞானம் குருடு ஆவது எப்போது? ..... என்று விளக்கினர் ஈன்ஸ்டீன்.**



ஈன்ஸ்டீன்

மனித மன உணர்வுகளை உடல் இச்சைகளைக் கட்டுப்படுத்தி மனிதனுக்குச் சாந்தியையும், அமைதியையும், சமாதானத்தையுமளித்து அவனை இயற்கையோடு ... ந்த ஆனந்தப் பெருவாழ்விற்கு அழைத்துச் செல்லும் மார்க்கம் அல்லது நெறி சமயம் எனப்படும் மனிதன் தன் வாழ்க்கையிற் தோன்றி மறையும் இன்ப துன்பங்களைப் போக்கி நிலைத்த இன்பத்தை இவ்வாழ்க்கையிலும் வரும் வாழ்க்கையிலும் அனுபவிக்க வழி வகுப்பதே சமயம்

சமயம் எனப்படுவது நடைமுறைக்குதவாத அனுபவபூர்வமாகச் சாதிக்க இயல த எண்ணங்களை ஏற்றுக் கொள்வது மட்டுமல்லாது மெய்ப்பொருளினை உணர்த்துவது' என்றுர். டாட்டர் இராதாகிருஷ்ணன்

ஆதி காலத்திலிருந்தே மனிதன் படிப்படியாக அறிவை வளர்த்தும் அனுபவத்தைப் பெருக்கியும் காலத்துற்குக் காலம் தேசவர்த்தமானத்திற்கமைய முன்னிருந்த அறிவு நிலையை அஃதாவது ஞானத்தை மேலோங்கச் செய்து கொண்டே வந்துள்ளான். இப்பரிணும வளர்ச்சியிலே ஆதி மனிதனிலும் பார்க்க இன்றைய மனிதன் மேலாகத் திகழக் காரணம் அறிவியல் என்பதை மறுக்கவோ மறைக்கவோ மூடியாது.

அறிவியல் விஞ்ஞானம், வானியல், தொல் பொருளியல் என்பவற்றைத் தன்னகத்தே கொண்டது. வையகத்தில் வெற்றிகரமான வாழ்வு வாழ வழி அமைப்பது விஞ்ஞானம். ஞானம் என்பது அறிவு எனவும் விஞ்ஞானம் என்பது கூர்ந்த (மேலான) அறிவு எனவும் பொருள்படும். அறிவியலை அறிவின் கூர்மம் எனவரையறுக்கலாம் மேலும் மேலும் மனித சமுதாயம் சிந்தித்து ஆராயத் தொடங்கும் போது பலவித சந்தேகங்கள் உருவ கின்றன.

தனக்கேற்பட்ட சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ள மனிதன் வாழ்க்கைத் தத்துவங்களை அலசிப் பிரித்து ஆராய்ந்தான். நான் முன்பு எங்கு இருந்தேன்? இனி எங்கு செல்வேன்? உலகைப் படைத்தவன் யார்? என்னையும் உலகையும் இயக்கி வரும் பொருளுண்டா? அது யாது? என்ற கேள்விகளை எழுப்பக் காரணம் அறிவியல் மறுமலர்ச்சியே. சமயம் கற்பிப்பது மனிதனின் உள்நோக்கிய ஆராய்ச்சியே. அறிவியல் தற்காலத்தில் பிரித்துக் கூறுவது புறபௌதீக ஆராய்வுகளாகும்.

கடவுளின் தூலசூக்கும சக்தியை வியந்து போற்றிய போது பிரபஞ்ச இயக்கத்தையும் சூரிய சந்திர இயக்கத்தையும் பஞ்ச பூதங்களான நிலம், நீர், காற்று, ஆ ாயம், தீ என்பவற்றின் நுணுக்கங்களையும் போற்றி சமயகுரவரில் ஒருவரான மணிவாசக சுவாமிகள் கூறிய திருவண்டப் பகுதியிலுள்ள சிறு கூற்றைப் பார்ப்போம்.

''அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கும்
அளப்பருந் தன்மை வளப் பெருங் காட்சி

''பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைகின்ற பரிபூரணனந்தம்'' எனத் தாயுமானவரால் பேசப்படும் இறைவன் எப்போதும் ஆடியவண்ணம் இருப்பதாக எம் சமயம் கூறு

கிறது. இந்த அண்டத்திலுள்ள பல்வேறு வெள்ளடுத் தொகுதி ளும் நெபுலாக்களும் அதன் ஆக்கக் கூறுன ஞாயிற்றுத் தொகுதியும் பல்வேறு கோள்களும் பூமியும் தொடர்ந்து இயங்கிய வண்ணம் உள்ளதாக வானியல் விஞ்ஞானிகள் கருதுகின்றனர். சடப்பொருளின் இறுதி ஆக்கக் கூறுன அணுவைக் கருத்திற் கொண்டால் கூட அதிலுள்ள கருவைச் சுற்றி மறை ஏற்றமுள்ய இலத்திரன்கள் தொடர்ந்தியங்குவதும் நாமறிந்தது அல்லவா?

விரதங்கள் அனுட்டித்தல் எம் சமயத்தில் பிரதான நடைமுறையாகும். விரதங்கள் ஏன் அனுட்டிக்கப்பட வேண்டும்? பொறிகளிலுலேற்படும் ஆசையை அடக்கி ஒரு முகமாக இறைவனைத் தியானிக்க என்ற தத்துவம் ஒருபுறமிருக்க விரத அனுட்டானத்தினுல் விஞ்ஞான பூர்வமாக ஏற்படும் நன்மையுண்டு உணவுக்கால்வ ,ய்த் தொகுதிக்கு ஓய்வு வழங்கி அதன் வினைத்திறனை அதிகரிப்பதற்கு விரதங்கள் பெரிதும் உதவும்

அடுத்ததாக எம் சமயச்சடங்கு 'ளில் மிக அதிகமாகமாயும் அடிக்கடியும் பயன் படும் பொருட்களான மஞ்சள், வேப்பிலை, கற்பூரம் போன்றவற்றை அறிவிய ் சிறந்த தொற்று நீக்கிகளாயும் நுண்ணங்கிகளைப் போக்கடிக்கும் சிறந்த கொல்லிகளாயும் ஏற்சிறது. ''அசெப்கோ'' சவற்காரத்தில் 5% காண ் படும் பாதரசக் குளோறைட் மாட்டுச் சாணத்தில் 5% இருப்பதாக அறியப்பட்டுள்ளது. இப்பதார்த்தம் சருமநோய்களைத் தீர்ப்பதில் வல்லது.

எம் ஆலயங்களில் அர்ச்சகர் தரும் வீபூதியை வாங்கித் தரித்து பின் அவரிடம் சந்தனம் வாங்கி நெற்றியிலிட்டுக் கொள்கிறோம் நாம் சந்தனம் இட்டுக் கொள்ளும் புள்ளி எமதுடலின் கவன ஈர்ப்புப் புள்ளி எனப்படுகிறது. இவ் விடத்தில் மூளையயின் மேற்பட்டையின் ஒருபகுதி அமைந்துள்ளது அவ்விடத்தைக் குளிர்மைப் படுத்துவதன் மூலம் அன்று முழுவதும் அமைதியான, மகிழ்ச்சியான மனம் அமைவதை அவதானிக்கிறோம்.

''மதத்தை ஒட்டிச் செல்லாத விஞ்ஞானம் நடக்கமுடியாத நொண்டி விஞ்ஞான ரீதியாக அமையாத மதம் பார்க்க முடியாத குருடு'' என்றார் விஞ்ஞானி அல்பேர்ட் ஈன்ஸ்டீன்,

செல்வி. ஜி. சிவப்பிரியா
மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை

சமயம் இல்லாத போது அறிவியல் பிரகாசிக்காது. சமயமும் அறிவியலும் ஒன்றையொன்று விட்டகன்று எதிர்த்திசையிற் தொழிற்படாது சமாந்தரக் கோடுகளாய் அமைந்து மனித வாழ்வை செம்மை நோக்கி இட்டுச் செல்கின்றன. ஆகவே சமயமும் அறிவியலும் ஒன்றோடொன்று விட்டகலாது பூவும் மணமும் போல நகமும் தசையும் போல விளங்குகின்றன. இவ்வாறே சமயத்தையும் அறிவியலையுமிணைத்து எத்தனையோ கருத்துக்களைச் சிந்திக்கலாம்.

சமயம் இல்லாத வாழ்க்கை மூக்கில்லாதவன் சுவாசிக்க முயல்வதை ஒத்தது என்ற காந்தியின் பொன் மொழியை உணர்ந்து கடைப்பிடிப்பதால் சமுதாயத்தையும் ஆண்மீக வாழ்வையும் வழிப்படுத்தி அறிவியலைப் பெருக்குவோமாக.

**எண்சிலம்பம்**
**போட்டி இலக்கம்: 4**
**விடைகள்:**

**இடமிருந்து வலம்**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | ... | 3 | 7 | 4 | ... | 1 |
| 5 | 4 | ... | 6 | ... | 4 | 8 |
| ... | 7 | 1 | ... | 1 | 9 | ... |
| 9 | ... | 6 | 0 | 0 | ... | 2 |
| ... | 6 | 9 | ... | 0 | 0 | .. |
| 8 | 8 | ... | 2 | ... | 6 | 5 |
| 9 | ... | 1 | 8 | 0 | ... | 0 |

# நடு வீதியில் ஒரு கல்

— ஜோய் பூரணச்சந்திரன்—

அன்று ஞாயிற்றுக் கிழமை. கண்ணன் காலை உணவை முடித்துக்கொண்டு யன்னலில்வந்துநின்று வீதியை வேடிக்கை பார்க்கத் தொடங்கினுன்.

கண்ணனின் வீடு கோவில் வீதியில் வீதியை அண்மித்த தாக அமைந்திருந்தது.

11 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் கண்ணனுக்கு விடுமுறை தினங்களில் யன்னலில் வந்து நின்று வீதியை வேடிக்கை பார்ப்பதென்றுல் மிகவும் பிடிக்கும்.

நேரம் காலை 9 மணியை அண்மித்துக்கொண்டிருந்தது.

சைக்கிள்கள், கார்கள், மினி வான்கள் வீதியில் விரைந்த வண்ணம் இருந்தன. நடந்து செல்வோரின் எண்ணிக்கையும் குறிப்பிடும்படியாக இருந்தது.

கிறீச்... டக்... டெக் வீதியில் சிறிது சலனம். சுமார் 18 வயது மதிக்கத்தக்க இளைஞன். கீழே, அவனுக்குமேல். அவனது சைக்கிள்.

மினிவான்களின் பாம்... பாம் ஒலிகள் ஆரவாரப்படுத்தின;

அப்பொழுது தான் கண்ணன் கவனித்தான். ஒரு பெரிய கல்ஒன்று. வீதியில் வீதி ஓரத்திற் சமீபமாக வீதியை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதை.

விரைந்த இளைஞன் சுதாகரித்துக்கொண்டு எழுந்தான். ஹான்டிலைச் சரிப்படுத்தினுன். ஏறிச் சவாரி செய்தான்.

கண்ணனின் மனதில் சலனம் முகத்தில் புன்னகை...... சந்தியைத் தாண்டிப் போய் ஓரமா சையிக்கிளை நிறுத்துவார், காலை உதறுவார். கையைத் தேய்ப்பார். இஞ்ச நிண்டு தேய்த்தால் வெட்கம். இனியும் இப்பாதையில் வரப்போற சிறுவர்கள் விழாமல் இருக்கவேண்டும் என்று நினைத்து கல்லை அப்புறப்படுத்தாமல் தான் விழுந்ததை யாரும் பார்த்து கேலிபண்ணப் போகிறுர்கள் என்று பயந்து உடம்பு நோவையும் பார்க்காமல் சைக்கிளைஉதைத்துக்கொண்டு போனுர்.

வீதியில் சயிக்கிள்கள், கார்கள், மினிவான்கள் தொடர்ந்த வண்ணம் இருந்தன. பாதசாரிகளின் எண்ணிக்கையும் ஏறுவரிசையில் அதோட கல்லும் அதேஇடத்தில், வீதியில், வீதி ஓரத்திற்கு சமீபமாக,

கண்ணன் மனதில் ஒரு முடிவுக்கு வந்திருந்தான். நேரம் 10மணி, 11மணிவரை இங்கேயே நின்று பார்ப்பது ஒரு வரும் கல்லை அகற்றுவிட்டால் தான் போய் கல்லைத் தூக்கி கரையில் போடுவது அவன் முடிவு.

கல்லு கல்லுப் பிள்ளையார் மாதிரி அதேஇடத்தில அமர்ந்திருந்தபடியால் சயிக்கிளில் சவாரி செய்கிறவர்கள் கல்லுக்கு வழிவிட்டு போகத் தொடங்கினுர்கள். அந்த பகுதி ஒரு தீண்டாமைப் பிரதேசமாகிவிட்டது.

ஊரடங்குச் சட்டத்திற்கு முதல் வீட்டுக்குப்போக வேண்டும். காணிக்கு எல்லை போடவேண்டும். டொனேசன் கொடுத்து மகளை பாடசாலையில் சேர்க்கவேண்டும். இப்படிப் பல பிரச்சனைகள் அவர்களுக்கு.


பாவம் கண்ணன். இந்தப் பிரச்சினைகளை அவனுல் விளங்கிக்கொள்ள முடியவில்லை. கண்ணனுக்கு கல்லுத்தான் பிரச்சினை. இனியும் யாராவது வந்து கல்லில் இடறக்கூடாது. வாகனங்களின் வேகத்தில் நேரமும் நகர்ந்துகொண்டிருந்தது. கண்ணன் ஒரு முடிவுக்கு வந்தான். இனியும் பொறுக்க முறயாது. நான்தான் கல்லை அப்புறப்படுத்த வேண்டும் —என்பதே அம்முடிவு.

கண்ணன் வீட்டுக் கேற்றை அண்மித்திருப்பான்.

கிழிந்த சேட்டும், சாரமும் அணிந்திருந்த சுமார் 50வயது மதிக்கத்தக்க ஒருவர் கல்லைத் தூக்கி ஓரத்தில் போடுவதைக் கண்டான்.

கண்ணன் வீதியைக் கடந்து அவருக்கு அருகில் ஓடிச் சென்று; 'ஐயா உந்தக்கல்லு இதில மணிக்கு முன்னலேயே கிடக்குது நானும் பார்த்துக்கொண்டுதான் இருந்தன். ஒருதரும் தூக்கி கரையில போடேல்ல... அதுதான் தூக்கிப் போடுவம் எண்டு ஓடி வந்தனுன்' என்றுன்.

'தம்பி... இது எங்கள் ஒவ்வொருவருடைய கடமை. அவர் செய்வார் இவர் செய்வார் என்று பார்த்துக்கொண்டிருக்கிறதைவிட நாங்களே செய்வது நல்லது. எங்கள் வேலையை வேறு யாராவது செய்வார்கள் என்று நினைப்பது எவ்வளவு அநியாயம்' —என்று சொலலிக்கொண்டே அவர் போய்விட்டார். ★




# இனாம்

## அண்ணா கோப்பியின் 100 gm

வெற்றுப் பக்கட்டுகளில் 10 கொடுத்து 1 ர ளரையும். 50 mg வெற்றுப் பக்கட்டு களில் 20 கொடுத்து 1 ரம்ளரையும், 25 mg வெற்றுப் பக்கட்டுகளில் 40 கொடுத்து 1 ரம்ளரையும் இனாமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

பெற்றுக் கொள்ளவேண்டிய இடம்:--

அண்ணா தொழிலகம்
இனுவில்

கிளை:-
அண்ணா கோப்பிக்கடை
யாழ்ப்பாணம்.

## கம்பியூட்டர் கல்வி

**COMPUTER PROGRAMMING IN BASIC ANG**

பயிற்சிக்காலம்; 40 Days
கட்டணம்; ரூ 750. மாத்திரம்

**COMPUTER PROGRAMIMNG IN DATA PROCESSING**

IN BASIC AND COBAL LANGUAGE
பயிற்சிக்காலம்; 6 மாதம்

- O/L படித்த இருபாலாரும் சேரலாம்
- கூடிய நேர செய்முறை பயிற்சி
- I. B. M (Compatable) கம்பியூட்டரில் வழங்கப்படும்
- பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற (Diploma) சான்றிதழ் வழங்கப்படும்,

**UNIKCO COMPUTER CENTRE**

No: 5 மின்சாரநிலைய வீதி, 2-ம் ஒழுங்கை
(உபதபாற்கந்தோர் அருகாமை)
யாழ்ப்பாணம்.

''இதோ பாருங்கள் அடுப்பில் நீங்கள் விறகை எரிக்கும் பொழுது, கரியும் சாம்பலும் எச்சமாக வருகின்றன ஆனால் நிலவாயுவை எரிக்கும் பொழுது அவ்வாறு கரியும் சாம்பலும், எச்சமாக வராமல் எரிவதுதான், 'முற்றாக எரிதல்' என்று கூறப்படும்''

# அறிவுலக அறிமுகம்

கலாநிதி சபா ஜெயராசா

## நிலவாயுவின் கதை

மழை பெய்தது. நல்ல மழை. நிலம் ஈரமாக இருந்தது. சுகந்தன் நிலத்தைப் பார்த்தான். 'ஏ நிலமே உனது தண்ணீர்த் தாகம் அடங்கிவிட்டதா' என்று கேட்டான்.

நிலம் சிரித்தது. 'என்னைக் கிண்டுகின்றார்கள். கிளறுகின்றார்கள். அப்பொழுதும் நான் சிரிப்பேன். எனக்குக் கீழே பொன் உண்டு, மணி உண்டு, என்று மட்டும் எண்ணுகிறீர்கள்! பெற்றோல் உண்டு, நிலக்கரி உண்டு, நிலவாயுவும் உண்டு. எவ்வளவு பெரிய செல்வம் உடையவள் நான் தெரியுமா?' என்று நிலம் பெருமிதம் அடைந்தது.

நிலவாயு என்றால் என்ன? எனக்கு அதைப் பற்றித் தெரியாதே' என்று சுகந்தன் கேட்டான். நிலவாயு என்பது ஒரு சிறந்த எரிபொருள், எரிக்கலாம், வெப்பம் உண்டாக்கலாம். எடுத்துச் செல்லலாம். பல்வேறு பொருள்களைச் செய்வதற்கு மூலப் பொருளாகவும் பயன்படுத்தலாம்' என்றது நிலம்.

'நிலத்தின் அடியிலே தண்ணீர் இருத்தல் போன்று வாயுவும் இருக்கின்றதா? புதுமையான செய்திதான்' என்று சுகந்தன் சொன்னான். 'இது என்ன புதுமையான செய்தி. கிறிஸ்துவுக்கு முன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஈரான் நாட்டில் நிலவாயுக் கசிவு ஏற்பட்டது. நிலவாயு பூமியில் உள்ள வெடிப்புக்களின் வழியாக மேலே வந்தது! ஈரானில் மட்டுமல்ல;சீனாவிலும் நிலவாயுவெளிநோக்கி வந்தது. அவர்கள் புத்திசாலிகள் அவற்றைப் பயன்படுத்தினர்.'

நிலவாயுவில் ஒரு பெரிய நன்மை உண்டு.அதைச்சுத்தப்படுத்தாமலும் பயன்படுத்தமுடியும். பூமிக்கு அடியில் இருந்து பெறப்படும் பெற்றோலைச் சுத்தப்படுத்திய பின்னரே பயன்படுத்தலாம். ஆனால் நேரடியாகவே பயன்படுத்தக்கூடிய நிலவாயு ரகங்களும் உண்டு.'

சுகந்தனுக்கு உற்சாகம் பிறந்தது உரத்துப் பாடினான்.

பூமகளே நீ வருவாய்
பொன் சொரிந்து
நீ வருவாய்
காலமெலாம் போற்றுகின்ற
கனியங்கள்
நீ தருவாய்—

'பாட்டு நன்றாகத்தான் இருக்கின்றது. ஆனால் எனது பெருமையை மக்கள் இன்னமும் உணரவில்லையே. என்னை அழுக்குப்படுத்துகின்றார்கள். மாசுபடுத்துகின்றார்

கள். வேலிகள் கட்டி என்னைப் பிரித்து ஆளுகின்றார்கள்.'

''உங்கள் கஷ்டம் எனக்குப் புரிகின்றது உங்கள் வேதனையை நான் அறிவேன். சரி சரி நிலவாயுவின் கதையைத் தொடருங்கள்'' என்று சுகந்தன் கேட்டான்.

நிலவாயுவைப் பயன்படுத்தி மின் உற்பத்திசெய்கின்றார்கள். உருக்கும் உலைகளை இயக்குகின்றார்கள். நிலவாயு நன்றாக எரிவதோடு முற்றாகவும் எரிந்துவிடும்.''

''முற்றாக எரிதல் என்றால் என்ன? என்று சுகந்தன் வினவிடுத்தான்.

''இதோ பாருங்கள் அடுப்பில் நீங்கள் விறகை எரிக்கும் பொழுது, கரியும் சாம்பலும் எச்சமாக வருகின்றன. ஆனால் நிலவாயுவை எரிக்கும் பொழுது அவ்வாறு கரியும் சாம்பலும், எச்சமாக வராமல் எரிவது தான், முற்றாக எரிதல்' என்று கூறப்படும்''

''அப்படியானால் நிலவாயுவைப் பயன்படுத்தினால் அடுக்களை நல்ல சுத்தமாக இருக்கும்'' என்றான் சுகந்தன்.

''உலகில் இன்று அதிக அளவு நிலவாயுவை ஐக்கிய அமெரிக்கா பயன்படுத்துகின்றது. அவர்கள் பயன்படுத்தும் மொத்த வலுவில் மூன்றில் ஒரு பங்கு நிலவாயுவாக விளங்குகின்றது. அங்கு நிலவாயுவைக் கொண்டு செல்வதற்கு மூன்றரை இலட்சம் கிலோ மீட்டர் நீளத்திற்கும் கூடுதலான குழாய்கள் பயன்படுகின்றன.''

''அது மட்டுமா/ ஐரோப்பாவில் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குக் குழாய்கள் வாயிலாக ஏற்றுமதியும் செய்கின்றார்கள். மனிதன் வளர்கின்றான். விஞ்ஞானம் வளர்கின்றது. நிலவாயுவைத் திரவமாக்கியும் இன்று பயன்படுத்துகின்றார்கள்'' என்று நிலம் கதை சொல்லிக் கொண்டேயிருந்தது. நிலத்தின் கதை முடிவடையாது.

## காலம் மாறிப் போச்சு

கட்டைவண்டி ஏறிப்போன
காலம்மாறிப் போச்சு - மேக
மூட்டந்தன்னை மோதித்தாவி
விரைந்து போக லாச்சு.

கட்டு மரங்கட்டிக் கடல்
தாண்டிப் போனோமன்று - நீர்
முட்டிநிற்கும் கடலினுள்ளே
கப்பல் விடலாச்சு.

கண்ணாடி காட்டி நிலவைப்
பிடித்துப் பார்த்த மனிதன்
மண்ணிலிருந்து நிலவில் இறங்கி
நடந்து வந்தான் பாரும்.

விரலை மடக்கிக் கணக்குப்படித்த
காலம் மாறிப் போச்சு - இப்ப
தரவு கொண்ட ''கல்குலேற்றர்''
கணித பாடம் ஆச்சு.

விஞ்ஞானத்தின் விந்தை தன்னை
வியந்து போற்றுவோம்
மெஞ்ஞானத்தை மறந்திடாது
வாழப்பழகுவோம்.

— வளவை வளவன் —

**கண்ணீர்ப் பூக்கள்...**
(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிருந்தார். அவர் இறந்ததும் கடனை அடைக்க முடியாமல் சங்கர் திண்டாட அந்த நேரம் பார்த்து அந்தப் பெரியவர் தன் ஒரு கால் ஊனமான மகள் சுமதியை அவன் தலையில் கட்டி கணக்கை முடித்தார் அதன் பின்னர் ஊரில் சங்கரையும், மனைவியையும் ஒரு முறை சந்தித்தாள் செல்வி. அவனைப் பார்த்துக் கலங்கிய சங்கரின் உணர்வுகளை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது. அதன் பின்னர் தான் அவள் கண்டிக்குச் சென்றாள். மீண்டும் ஊர் திரும்பாமல் இருந்திருக்கக் கூடாதா என இப்போது தான் எண்ணுகின்றாள். சங்கருடைய பாடல்கள் செல்வியின் காது மானசீகமாக வாழ்க்கை நடத்திக் கொண்டு இன்றும் அவள் ''மிஸ் செல்வி''யாகவே இருக்கிறாள்.

வைத்தியசாலையில் சங்கரைப் புற்றுநோயிலிருந்து காப்பாற்றப் படாத பாடு பட்டாள் செல்வி ஆனால் காலம் அவர்களுக்காகக் காத்திருக்கவில்லை. காலன் எழுந்து வரத்தொடங்கி விட்டான் போலும். அன்று சங்கர் பாதி மயங்கிய நிலையிலேயே இருந்தான். அன்று இரவு செல்வி வைத்தியசாலையிலேயே தங்கினாள். விடிகாலை நேரம் சூரியன் உதயமாகும் வேளை. இரு பெண்களின் நினைவுகளும் உணர்வுகளும் அஸ்தமனமாயின. அன்று சங்கர் பாடிய களில் ஒலித்தன. இன்று அவன் ஆத்ம ராகங்கள் ஒய்வெடுக்கின்றன. அறையின் வெளியே சுமதியின் அழுகுரல் பெரிதாக ஒலித்தது. வாய் விட்டு அழமுடியாத நிலையில் செல்வி வெளியே வந்து சலனமற்ற முகத்துடன் தனது வீட்டை நோக்கி நடந்தாள். ஆனால் அவள் விழிகள் இரண்டும் அவளையும் மீறிக் கண்ணீர்ப்பூக்களைச் சொரிந்தன.

எங்கிருந்தோ வந்த ''நான் கேட்டதோ பன்னீர்ப்பூக்கள். நீ தந்ததோ கண்ணீர்ப் பூக்கள்'' என்ற பாடல் வரிகள் அவள் காதில் வந்து மோதின. அவை தன்னை நோக்கிப் பாடப்படுவது போன்ற உணர்வுடன் அவள் கால்கள் வீட்டை நோக்கி நடைபோட்டன. ★

நீங்கள் வெளி நாட்டு வேலைவாய்ப்புகள் மூலம்
பொருளாதார ரீதியில் முன்னேற வேண்டுமா?
இக் கால கட்டங்களில் ஏற்படும் வேலைவாய்ப்பு
ஏமாற்றங்களில் இருந்து உங்களைப் பாதுகாக்க வேண்டுமா?
மிகக் குறுகிய காலத்தில் பாதுகாப்பான முறையில்
கனடா பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டுமா?

**உடனே நாடுங்கள்**

**A. வாசன் அசங்கா இன்றப் பிறைஸ்**

ஆண்களுக்கு மத்திய கிழக்கு, சிங்கப்பூர், மலேசியா, புருனே போன்ற நாடுகளிலும் பெண்களுக்கு மத்திய கிழக்கு, சிங்கப்பூர் நாடுகளில் வீட்டுப் பணிப் பெண்ணாகவும் வேலைவாய்ப்புக்கள் பெற்றுத்தரப்படும்.

**A. வாசன்**
ASANGA ENTERPRISES
No. 32, 5th Crost St,
Jaffna.

## மழை தந்த...

( 11 ஆம் பக்கத் தொடர்ச்சி )

குகிறது. செந்தூரன் வீட்டுக்குள் வெள்ளம் வந்து சேர்ந்தது. தொடர்ந்து ஐந்து மணித் தியாலங்களாக மழைபெய்தது.

பின் கொஞ்சம் கொஞ்சம்ஆக மழை நிற்கத் தொடங்கியது. இடிமுக்கமும் நின்றது. செந்தூரனின் பயமும் குறைகிறது. ஆனல் செந்தூரனின் வீட்டில் வெள்ளம் நின்றது. செந்தூரனின் தகப்பனுர் வெளியே சென்று பார்த்தபோது அங்கே பார்த்த காட்சி! பலர் இறந்து கிடந்தனர். காரணம் அவர்கள் வாழ்ந்த வீடு கொட்டில் வீடு. அதன் கூரையில் இடிமுழுக்கம் விழுந்ததால் அதில் மரமும் விழுந்துகிடந்தது. அதனுல் அதற்குள் இருந்தவர்கள் இறந்துகிடந்தனர்.

மறுபக்கம் திரும்பிப் பார்த்தால் மின்வயர்கள் விழுந்து கிடந்ததால் பலர் இறந்துகிடந்தனர். அதன் மறுபக்கத்தில் வெள்ளத்தில் நீந்திச் செல்கின்றனர் சிலர். அதேநேரத்தில் வள்ளத்தில் மக்கள் சென்று கொண்டிருந்தனர். இறந்தவரின் சடலத்தை கொண்டு செல்ல சிலர் வந்தனர்.

மழையின் கொடூரத்தை நினைத்து மக்கள் வருந்தினர். அன்று அந்த இடமே வெறிச்சோடிக்கிடந்தது. அதனுல் பலர் அந்த இடத்தை விட்டு வேறு இடத்துக்குச் சென்றனர்.

அந்த ஊர் மக்கள் எல்லோரும் அடுத்த நாள் ஒன்று சேர்ந்து தண்ணீருக்குள் புதைந்து இருக்கும் சடலங்களை எடுத்தனர். அன்று வந்த தினசரிப் பத்திரிகை அந்த மழையைப் ப்ற்றி பின்வருமாறு எழுதியது:-

அந்த மழையில் இறந்தவர்களின் எண்ணிக்கைகள் இருபத்திரண்டு ஆகும். இதனுல் ஏற்பட்ட சேதம் மூன்று லட்சமாகும்.

## காந்தியார் வாழ்வில்

மகாத்மா காந்தியடிகள் சுதந்திர போராட்டத்தின் போது கைது செய்யப்பட்டு ஆகாகான் அரண்மனையில் சிறை வைக்கப்பட்டார். அவருக்கு ஒதுக்கப்பட்ட அறையின் தரையில் 80 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள அயல் நாட்டு இரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டு இருந்தது.

இரத்தினக் கம்பளத்தைக் கண்டு திடுக்கிட்டு அதை அகற்றினுலொழிய தாம் அந்த அறைக்குள்ளே செல்ல இயலாதென்று காந்தி அடிகள் பிடிவாதமாக கூறினர். அதன் பின்னர் கம்பளம் அகற்றப்பட்டு 'சி' வகுப்புக் கைதிகள் பயன்படுத்தும் கோணிப்பாய், அலுமினியத் தட்டு, குவளை, மண்பானை முதலியன கொடுக்கப்பட்டன.

மகாத்மா காந்தியடிகள் மாணவனுக இருந்த காலத்தில் அரிச்சந்திரா நாடகத்தைப் பார்க்கச் சென்ருர். அந்த நாடகம் அவரது இதயத்தை வெகுவாகக் கவர்ந்து விட்டது. பலமுறை பார்த்தும் சலிப்புத் தோன்றவில்லை. ''அரிச்சந்திரனைப் போல எல்லோரும் சத்தியந்தர்களாக இருக்கக் கூடாதா'' என எண்ணினுர். ''சத்தியத்தை கடைப் பிடித்து நின்று, அரிச்சந்திரன் பட்ட துன்பங்களையெல்லாம் அனுபவிக்க வேண்டும் என்ற இலட்சியம் என் உள்த்தில் குடி கொண்டது என்று கூறுகிருர்.

க. துவாரகன்
(யாழ். இந்துக்கல்லூரி)

## அடைப்பட விளக்கம்

ஒரு சிறுவன் சூரியனை வரைந்தான். அதன் அருகே கதிர்களை வரைந்தான். தனது ஓவியத்தைத் தகப்பனிடம் காட்டினுன். ''எப்படி இருக்கிறது'' என்று கேட்டான்.

''அருமை, அருமை'' என்று சொன்ன தகப்பன் சூரியனுக்குக் கீழே ஒரு தண்டையும், இரு இலைகளையும் வரைந்தார்.

''இப்போது அது சூரிய காந்திப்பூ'' என்று சொல்லிச் சிறுவன் துள்ளிக் குதித்தான்.

— நன்றி — ''மீஷா''

கம்பர் ஐநூறு பொன் பெற்றுப் பாடி ஏழையாக்கிய சிலம்பியை, ஔவையார் கூழுக்குப் பாடி செல்வத்தை வழங்கினார்:

# "கூழுக்குப் பாடி"

— பொ. சண்முகநாதன் —

'கூழுக்குப் பாடி' என்றதும் ஔவையாரின் பெயர் எமக்கு நினைவுக்கு வருகிறதல்லவா? அவரை அப்படி அழைக்கக் காரணமாக இருக்கின்ற கதை உங்களுக்குத் தெரியுமா? அக்கதையிலேயே கம்பர் ஒரு பாட்டுக்கு ஆயிரம் பொன் பெறுகின்றவர் என்ற செய்திக்கும் விளக்கம் கிடைக்கிறது.

அக்காலத்திலே சோழ நாட்டில் சிலம்பி என்றொரு பெண் இருந்தாள். அவள் கம்பர் வாக்கினால் தான் பாடப்பெற்றால் அதிக செல்வாக்குப் பெறலாம் என்று கருதினாள். அவரை நாடிச் சென்று தன் வேண்டுகோளைச் சொன்னாள். கம்பர் ''ஒரு பாட்டுக்கு ஆயிரம் பொன் தரவேண்டும்'' என்றார்.

சிலம்பி தான் தேடிவைத்த சொத்துக்கள் எல்லாவற்றையும் விற்றும் ஆயிரம் சேரவில்லை. ஐநூறு பொன்தான் தேறியது. அதைக் கம்பரிடம் கொடுத்துத் தனது நிலையை விளக்கினாள். கம்பரா இறங்கி வருபவர்? 'ஆயிரம் பொன்னுக்கு அரைக்காசு குறைந்தாலும் முடியாது' என்றார்.

அவள் கொடுத்த ஐந்நூறு பொன்னுக்கு ஓர் அரைப் பாட்டுப் பாடி அதனை அவள் வீட்டுச் சுவரில் எழுதிவிட்டுச் சென்றார். அக்குறைப்பாடல் இது தான்—

''தண்ணீ நம் காவிரியே; தார்
வேந்தன் சோழனே;
மண்ணுவ தும்சோழ மண்ட
லமே''

சிலம்பியின் நிலை கையிலிருந்த பொருளையும் இழந்து மேலும் வறுமையை விலைக்கு வாங்கிவிட்டது போலாயிற்று

அப்பொழுதுதான் பசியால் மிக வருந்திய ஔவையார் அவ்வீதியால் வந்தார். அவ்வில்லத் திண்ணையில் அமர்ந்து சிலம்பியிடம் ''பசியாயிருக்கிறது. கொஞ்சம் கூழாவது கொடுப்பாயா?'' என்றார். சிலம்பியும் தனக்கென்றிருந்த கூழை ஔவைக்கு கொடுத்து உபசரித்தாள். பசிக்களை நீங்கிய ஔவையார் சுவரிலுள்ள பாடல் வரிகளைக் கவனித்தார். அதன் வரலாற்றைக் கேட்டார்.

அவள்மீது அன்பு கூர்ந்து மிகுதி இரண்டடிகளையும் எழுதி வெண்பாவைப் பின் வருமாறு முடித்துவைத்தார்.

...பெண்ணாவாள்
அம்பற் சிலம்பி அரவிந்தத்
தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு''

இச்செய்யுளை எழுதியதும் அப்பெண் காலில் செம்பொற் சிலம்பணியும்படியான செல்வவதியானாளாம். கம்பர் ஐநூறு பொன் பெற்றுப் பாடி ஏழையாக்கிய சிலம்பியை' ஔவையார் கூழுக்குப் பாடி' அந்நிலைக்கு உயரத்திவிட்டார் என்பது கதை

தண்ணீரும் காவிரியே தார்
வேந்தன் சோழனே
மண்ணுவதும் சோழ மண்ட
லமே — பெண்ணாவாள்
அம்பற் சிலம்பி அரவிந்தத்
தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு.

# நாய் செய்த நன்றி




மலையூரிலே கந்தன் என்ற விவசாயி இருந்தான். அவன் ஒரு நாயை வளர்த்து வந்தான். அதன் பெயர் ஜிம்மி அது நல்ல சடைநாய் அந்த நாயை அவன் சிறு குட்டியிலிருந்தே வளர்த்து வந்தான். கந்தனுக்கு கதிரன் என்ற மகன் இருந்தான். கந்தனும் கதிரனும் முற்காலத்தில் கணபதிப்பிள்ளை என்ற பெரியாரிடம் வேலை செய்து வந்தார்கள். கணபதிப்பிள்ளை நல்ல குணமுடையவர். கந்தன் அவரது அன்பிற்குப் பாத்திரமானவன்.

அப்பொழுது கணபதிப்பிள்ளைக்கு வெளிநாடு செல்ல வேண்டி நேர்ந்ததால் கந்தன் அவரிடம் வேலை பார்த்ததை விட்டு விட்டு தன் வீட்டில் உள்ள தோட்டத்தில் வேலை செய்து சம்பாதித்தான். கந்தனும் கதிரனும் ஒரு வயல் வேலை செய்துகொண்டிருக்கும் போது கணபதிப்பிள்ளையின் நன்பர் ஒருவர் அங்கு வந்து கந்தனிடம் ஒரு பணமுடிச்சைக் கொடுத்து ''இதில் ஐயாயிரம் ரூபாய் உளது கணபதிப்பிள்ளை வெளிநாடு சென்றிருந்தார் அல்லவா? அப்பொழுது ஒரு விபத்தில் இறந்து விட்டார் இறக்கும் பொழுது இப்பணத்தை உன்னிடம் கொடுக்குமாறு கூறினர் அது தான் நான் தந்தேன் என்றூர்.

கந்தனுக்கு ஒரு பக்கம் மகிழ்ச்சியாகவும் ஒரு பக்கம் துக்கமாகவும் இருந்தது. அந்தப் பணத்தை எங்கு வைப்பதென யோசித்தபோது கதிரன் ''பக்கத்திலிருந்த ஆலமரத்தின் கீழ் புதைத்து வைக்கலாமே என்றுன். கந்தனும் அதற்குச் சம்மதித்து அங்கு புதைத்து வைத்தான். ஒவ்வொரு நாளும் கொஞ்சங் கொஞ்சமாக எடுத்துத் தம் செலவுக்கு பயன்படுத்தினர்.

ஒரு நாள் பணம் எடுக்க வரும் பொழுது ஒரு சிறுவன் அதைக் கண்டு விட்டான் அவன் தந்தை அவ்வூரில் பெரிய பணக்காரனும் கஞ்சனும் கூட. அச்சிறுவன் தான் கண்டதைத் தன் தகப்பனிடம் கூற தகப்பன் பேராசை கொண்டு அவ்விடத்தை அடைந்து பணத்தை எடுத்துக் கொண்டு வீடு திரும்பின போது கந்தனது நாயான ஜிம்மி அவனையும் அவன் மகனையும் கடித்து பணத்தை மீட்டுக்கொண்டு போய் கந்தனிடங் கொடுத்தது. பணக்காரனே அதைக்கண்டு இனி இந்தப்பக்கம் வருவதில்லை என்று தன் மகனேடு ஓட்டம் பிடித்தான். கந்தனும் தன் நாய்க்கு நன்றி கூறி அப்பணத்தைத் தன்னிடமே வைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தான். ★

செல்வி
**ஷர்மிளா சுப்பிரமணியம்**
(இல: 30)


# தென்மராட்சியின் முத்த பாடசாலை



நா. கெளரிதரன்

**ப**த்தொன்பதாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஆங்கில அரசாங்கத்தின் விருப்பத்தோடு மிஷனரிச் சபைகள் இலங்கைக்கு வருகை தந்தன. இவர்களுடைய வருகையினுல் நாட்டில் பல பாகங்களிலும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு கல்வித்துறையில் புதிய சகாப்தம் உருவாகியது.

இந்த வரிசையில் தென்மராட்சியில் 1875 ஆம் ஆண்டு ஓர் ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பிக்க மிஷனரிமார் முயற்சித்தனர். இந்த நேரத்தில் இப் பகுதி போலிஸ் நீதவானுக கடமையாற்றிக் கொண்டிருந்த திரு. ஜேம்ஸ் ருவாட் டிறிபேக் இந்த முயற்சிக்கு உதவ முன் வந்தார். திரு.



டிறிபேக் இக் காலப்பகுதியில் மிஷனரிமாருக்கு பாடசாலை கட்ட உதவியதால் அவரது நாமத்தையே அப் பாடசாலைக்கு சூட்டினர். இப் பகுதி மக்களின் கல்வி வளர்ச்சிக்கு மிஷனரிமாருடன் சேர்ந்து வித்திட்டவர் திரு. டிறிபேக் எனலாம்.




1875 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ்வ ங்கிலப் பாடசாலையில் 5ம் வகுப்பு வரை இருந்தது 77 மாணவர்கள் கற்க ஆரம்பித்தார்கள். கல்வியின் ஊடாகவே தமது சமய போதனைகளை அறியச் செய்யலாம் என தென்மராட்சிப்

து. லம்போதரன்

பகுதியில் பல தமிழ் பாடசாலைகளையும் அமெரிக்க மிஷனரிமார் நிறுவினர். இப் பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் ஆங்கிலக்கல்வி பெறும் நோக்கமாக டிறிபேக் ஆங்கிலப் பாடசாலைக்கு வந்தனர். இவ்வாறு ஆங்கிலக் கல்வி பெறுவதற்கு தென்மராட்சியில் தோன்றிய முதற் பாடசாலை காலம் செல்ல மாணவர்கள் பலரின் அறிவு வளர்ச்சிக்கு தொண்டாற்றியது.

1879 ஆம் ஆண்டு பாடசாலை முகாமையாளராக சனம் T. P கனற் என்பவர் நியமிக்கப்பட்டார். இவர் சபை ஊழியத்துடன் டிறிபேக் பாடசாலையின் வளர்ச்சியிலும் இப் பகுதி மக்களின் கல்வி வளர்ச்சியிலும் அதிக அக்கறை செலுத்தினர். 1899ஆம் ஆண்டில் டிறிபேக் பாடசாலையின் தலைமையாசிரியராக திரு. ஆர். ஏச் முத்தையா நிக்கலஸ் என்பவர் நியமிக்கப்பட்டார்.

1913 ஆம் ஆண்டு பாடசாலை முகாமையாளராக யோசப் கின்ஸ்பெறி சின்னத்தம்பிப் போதகர் வந்தார். இவர் 1924 ஆம் ஆண்டு வரை பாடசாலை வளர்ச்சிக்கு பாடுபட்டார். இவர்கள் காலத்திலேயே இப் பாடசாலை



சு. தமிழினி

துரித வளர்ச்சி அடைந்தது என்று கூறலாம். இப் பாடசாலையின் பிரதான மண்டபம் இவரால் ஏற்பட்டதாகும். இவரின் மகத்தான சேவையை பாராட்டு முகமாகவே அமெரிக்க மிஷனரியால் 1925 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆசிரியப் பயிற்சிச் சாலைக்கு இவரின் நாமத்தையே சூட்டினர் இந்த சின்னத்தம்பி ஆசிரியர் கலாசாலை 1944 ஆம் ஆண்டு நல்லூருக்கு மாற்றப்படும் வரை டிறிபேக் கல்லூரியின் ஒரு பகுதியாகாவ இருந்தது.

இக் காலப் பகுதியில் பாடசாலை அதிபராக சி. எஸ் ஏபிரகாம் இருந்தார். 1920 ல் 3000 மாணவர்கள் 30 பெண்கள் உட்பட கல்வி பயின்றனர் தூர இடங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கு உதவியாக பாடசாலையில் ஒரு விருதிச்சாலையும் ஆரம்பிக்கப்பட்டு 30 மாணவர்கள் தங்கி கல்வி கற்றார்கள்.

இக்காலப் பகுதியில் அமெரிக்க மிஷனால் நடாத்தப்பட்ட ஆங்கில பாடசாலைகள் யாழ்ப்பாணக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டன. இதன் பயனாக டிறிபேக் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் மேற்படிப்புக்கு யாழ்ப்பாணக் கல்லூரிக்கு சென்று கல்வி கற்க வசதி அளித்தது.

## பேட்டி சி சுந்தரலிங்கம்

1931ஆம் ஆண்டு திரு கே. எஸ். சரவணமுத்து தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இவரது ஆளுமையின் கீழ் ஈ. எஸ். எல். சி வரை இருந்த பாடசாலை மாணவரின் உயர் கல்வி வளர்ச்சிக்காக 1940 ஆம் ஆண்டு எஸ் எஸ். சி லண்டன் மற்றுக் லேசன் வரை வகுப்புகள் அமைக்கப்பட்டன.

இக் காலப் பகுதியில் ஏற்படுத்திய நூல் நிலையம் இன்னும் மாணவர்களுக்கு பயன் அளிப்பதாக உள்ளது.

1947ஆம் ஆண்டு அமெரிக்க மிஷன் செய்து வந்த சேவை தென் இந்தியத் திருச்சபையின் ஆதினத்தின் கீழ் கொண்டுவர, டிறிபேக் பாடசாலையும் இதன் கீழ் வந்து இதன் உதவியுடனும் அதிபரின் முயற்சியாலும் மேலும் பல கட்டிடங்கள் கட்டுப்பட்டு 1952ஆம் ஆண்டு 75 ஆவது யுபிலிவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடி பெருமை கொண்டது.

1956 ஆம் ஆண்டு திரு கே. எஸ். சரவணமுத்து இளைப்பாற திரு ஏ கே சபாபதிப் பிள்ளை இப்பாடசாலைன் அதிபரானார். இக்கால கட்டத்தில் அரசியல் கொள்கையில் மாற்றம் ஏற்பட, கல்வியிலும் மாற்றம் ஏற்படவதாயிற்று 1961ஆம் ஆண்டு தனியார் பாடசாலைகள் தேசிய மயமாக்குவது இடம் பெற்றது. டிறிபேக் கல்லூரியும் தேசிய மயமாக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அரசாங்க உதவியுடன் கல்லூரிவளரலாயிற்று.

திரு ஏ. கே சபாபதிப்பிள்ளைக்குப் பின் திரு. ஜே. வி. தம்பிநாயகம் டிறிபேக் கல்லூரி அதிபரானார். இவர் உதவி ஆசிரியராகவும், கடமையாற்றியவர் இவர் 1964ஆம் ஆண்டு தொடக்கம் 1969 வரை அதிபராக



ஞா. செறீன்

இருந்து மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார்.

இவரின் பின் உபஅதிபராக திரு .எம் சபாநாயகம் 1969 ஆம் ஆண்டு அதிபரானார். இப்பாடசாலையில் வரலாற்றில் இவரே முதன் முதலில் நியமிக்கப்பட்ட இந்து. கல்லூரியின் ஆங்கிலத் தரத்தைப் பேணிக்காத்தார்.

இவரைத் தொடர்ந்து திரு. க பாலசந்திரன் டிறிபேக்கல்லூரியின் அதிபரானார்.

திரு. க. பாலச்சந்திரன் சிறந்த விஞ்ஞான ஆசிரியர் எனப் பலராலும் பாராட்டுப் பெற்றவர். இவரின் ஆளுமையின் கீழ் விஞ்ஞானத் துறை வளர்ச்சி பெற்று வருகின்றது. பாடசாலையில் புதிய கட்டிடங்களும் காட்சி தருவதாக இருக்கின்றன. தென் மராட்சியில் மேலும் பெருமையும் புகழும் பெற்று விளங்க வாழ்துகிறோம்.

இப்படித் தங்கள் பாட வரலாற்றை எம்மிடம் கூறிப் பெருமிதம் அடைந்தார்கள். பாடசாலை மாணவர்களான செல்வன் து. லம்போதரன், செல்வன் நா. கௌரிதரன், செல்வி ஞா. செறீன், செல்வி ச. தமிழினி. ★

# நாம் பருகும் பால்

## அங்கம் III

"அம்மா பாலுக்குச் சீனி போடவில்லையா?" என்று இளங்கோ கேட்டான். எல்லோரும் பாலைக் குடித்துப் பார்த்தார்கள் "சீனி போடாவிட்டாலும் பால் இனிமையாக இருக்கிறது" என்றாள் மலர்.

"பால் ஏன் இனிப்பாக இருக்கிறது?" என்றான் இளங்கோ. "சீனி, குளுக்கோசு முதலியவை இனிப்புச் சுவை உள்ளவை. இவை வெல்ல உணவுகள். பாலிலும் இது போன்ற வெல்ல உணவு உண்டு. இதனால், பால் இனிக்கிறது" என்றார் அப்பா. பாலில் வெல்லங்களும் இருக்கின்றன. இல்லையா?" என்றான் இளங்கோ. "ஆம்" என்றார் அப்பா.

"குழந்தைகளின், பல், எலும்பு என்பன வளரப் பாலுணவு அவசியம். என்று கூறுகிறார்கள். பால் எவ்வாறு பல், எலும்பு வளர்ச்சிக்கு உதவுகிறது?" என்றாள் மலர்.

"கேத்தலில் தண்ணீர் கொதிக்க வைப்பதைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? கேத்தலின் உள்ளே அடிப்பாகத்தில் எதையாவது கண்டிருக்கிறீர்களா?" என்று அப்பா கேட்டார்.

"ஆம் கேத்தலின் அடியிலே ஒரு பொருள் வெள்ளையாகக் காணப்படும்." என்றாள் மலர். "தண்ணீரில் சில பொருள்கள் கரைந்துள்ளன. இவை கனியுப்புக்கள் எனப்படும், இக் கனியுப்புக்கள் எலும்பு, பல் வளர்ச்சிக்கு உதவுகின்றன" என்றார் அப்பா.

"பாலிலும் இது போன்று கனியுப்புக்கள் உண்டா?" என்றாள் மலர். ,,ஆம், பாலில் கனியுப்புக்களும் உண்டு. இவை எலும்பு, பல் வளர்ச்சிக்கு உதவுகின்றன." என்றார் அப்பா.

"பாலில் கனியுப்புக்களும் வெல்லங்களும் உண்டு. இல்லையா?" என்றான் இளங்கோ. "ஆம்" என்றார் அப்பா

"உணவிலிருந்து நாம் சத்தியைப் பெறுகிறோம். பாலில் கொழுப்பும் வெல்லமும் உண்டு. எனவே, பால் எமக்குத் தேவையான சத்தியைத் தரும். பாலில் புரதம் உண்டு. புரதம் உடல் வளர்ச்சிக்கு உதவுகிறது. பாலிலுள்ள கனியுப்புக்கள் எலும்பு, பல் முதலியவற்றின் வளர்ச்சிக்கு உதவும். ஆகவே, பால் எமக்குத் தேவையான சத்துக்கள் பலவற்றைத் தருகிறது" என்று மலர் விளக்கினாள்.

— மயிலங்கூடலூர் **பி. நடராஜன்** —

"அப்படியானால் பாலை ஒரு முழு உணவு என்று கூறலாம் அல்லவா?" என்று இளங்கோ கேட்டான். "ஆம். மரக்கறிகளில் உள்ள சத்துக்கள் பாலில் உண்டு பழங்களில் உள்ள சத்துக்கள் பாலில் உண்டு. முட்டையில் உள்ள சத்துக்கள் பாலில் உண்டு. பல உணவுகளில் உள்ள சத்துக்கள் பாலில் இருப்பதால்

பால் ஒரு முழு உணவு என்று சொல்லலாம்.'' என்று மலர் விளக்கினள்.

''பாலில் பலவகையான சத்துக்கள் உள்ளன. பல உணவுகளில் உள்ள சத்துக்கள் பாலில் உண்டு எனவே பாலை மட்டும் குடிக்துத் தேவையான சத்துக்களைப் பெறலாம் அல்லவா?'' என்ருன் இளங்கோ.

"ஆம். அதிக அளவு பாலைக் குடிப்பதால் தேவையான சத்துக்களைப் பெற முடியும். குழந்தைகளுக்குப் பால் மட்டும் போதிய உணவாகும் வளர்ந்தவர்களுக்கு அதிக சத்தி வேண்டும். அவர்கள் வேறு உணவுகளையும் நிறைய உண்ண வேண்டும் அதனுல் தேவையான சத்துக்களைப் பெறமுடியும்'' என்ருர் அப்பா.

''சரி, இரண்டுமூன்று இடியப்பமும் சாப்பிடு'' என்ருர் அம்மா. மலர் மற்றவர்களோடு சேர்ந்து சாப்பிட்டாள்.

— (வளரும்)

---

# அர்ச்சுன சிறுவர் வட்டம்

15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் அர்ச்சுன சிறுவர் வட்டத்தில் உறுப்பினர்களாகச் சேரலாம்.

உறுப்பினர்களாகச் சேர விரும்புவோர் ''அர்ச்சுன'' வில் வெளியாகும் 3 கூப்பன்களை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

உறுப்பினர்களாகச் சேர்ந்த மாணவர்கள் எழுதும் கதை, கவிதை, கட்டுரைகள் ஏனையவை அர்ச்சுனவில வெளியாகும்

மாணவர்கள் தமது ஆக்கங்களைத் தாளில் ஒரு பக்கத்தில் மட்டும் எழுத வேண்டும். மாணவர் தானகவே எழுதினர் என்று வகுப்பாசிரியர் அல்லது அதிபர் உறுதியுரை வழங்க வேண்டும்.

அங்கத்தவர் உறுப்புரிமை அட்டை அஞ்சலில் அனுப்பி வைக்கப்படும்.

## அர்ச்சுன சிறுவர் வட்டம்

முழுப்பெயர் : செல்வன் / செல்வி ..........

..........................................

வகுப்பு: ..........................................

வயது: ..........................................

பாடசாலையின் பெயர்: ..........................................

..........................................

வீட்டு முகவரி: ..........................................

..........................................

மாணவர் கையொப்பம்: ..........................................

..........................................

அதிபர் கையொப்பம்: ..........................................

..........................................

அனுப்ப வேண்டிய முகவரி ;-

ஆசிரியர்
''அர்ச்சுன''
அஞ்சல் பெட்டி எண்; 23
யாழ்ப்பாணம்

# வேடனும் பாம்பும்

தமிழில் தருபவர்: திருச்செந்தூரன்.

பனி உறையும் கடுங்குளிர் காலம். வேடன் ஒருவன் ஆற்றங்கரை வழியே சென்று கொண்டிருந்தான். அங்கே ஒரு பாம்பு பனியின் மேலே கிடந்தது. அதன் வாலைச் சுற்றிப் பனி உறைந்திருந்தது. ''அன்புள்ள ஐயா'' பாம்பு வேடனை அழைத்தது. ''தயவு செய்து என்னைக் காப்பாற்றுங்கள்'' என்றது.

வேடன் பனிக்கட்டியை வெட்டி அகற்றினன். பாம்பை விடுவித்தான். ''என் உடலைச் சூடாக்கி விடுங்கள்'' என்று பாம்பு வேண்டியது. வேடன் பாம்பைத் தனது மார்போடு அணைத்துக் கொண்டான். பாம்பின் உடல் சூடானது. அது உயிர்ப்பு பெற்றது.

''ஐயா, நீங்கள் என்னைக் காப்பாற்றி விட்டீர்கள். இனி நான் உங்களைக் கடிப்பேன். அன்புக்குக் கைமாறுகக் கொடுமை செய்ய வேண்டும்'' என்று பாம்பு வேடனிடம் கூறியது.

''சிறிது நேரம் பொறுத்துக்கொள் என்று வேடன் கூறினன்.'' நான் அன்புக்குக் கைமாறுக அன்பையே செலுத்தியிருக்கிறேன். நாம் முதலிலே சந்திப்பவரிடம் எமது பிரச்சினையைத் தீர்க்கும்படி கேட்போம்'' என்று அவன் கூறினுன். பாம்பு வேடனின் உடலைச் சுற்றிக் கொண்டது. வேடன் தொடர்ந்து நடந்தான்.

வழியில் ஒரு பசு வந்தது. பசு முறையீட்டைக் கேட்டது. ''நன்மைக்கு நன்மையே செய்யவேண்டும். எனது எசமான் எனக்கு வைக்கோலை உணவாகத் தருகிருர். நான் அதற்கு கைம்மாறுக அவருக்குப் பாலைக் கொடுக்கிறேன்'' என்று பசு கூறியது.

''என்னைப் போக விடு'' என்று வேடன் பாம்பைக் கேட்டான். ஆனுல், பாம்பு ஒப்புக் கொள்ளவில்லை. ''மாட்டுக்கு மோட்டுப் புத்தி. நாம் வேறுயாரையாவது கேட்போம்'' என்றது பாம்பு.

வழியிலே ஒரு குதிரை எதிர்ப்பட்டது. குதிரை முறையீட்டைக் கேட்டது. வேடனும் பசுவும் சொல்வதே சரியென்று குதிரை எண்ணியது. ''எனது எசமான் எனக்குக் கொள்ளை உணவாகத் தருகிருர். நான் அதற்குக் கைமாறுக அவரது வண்டியை இழுக்கிறேன்'' என்று குதிரை கூறியது.

''பசுவும் குதிரையும் மனிதன் வளர்க்கும் பிராணிகள். அதனுல் அவை மனிதனுக்காகப் பேசுகின்றன. நாங்கள் காட்டு விலங்கு ஒன்றிடம் முறையிடுவோம்'' என்றது பாம்பு. அது பிடிவாதமாக நின்றது.

காட்டின் எல்லையிலே ஒரு மரம் நின்றது. அதன் கிளையில் காட்டுப் பூனை ஒன்று இருந்தது. பாம்பு அதனிடம் முறையிட்டதும் ''எமது பிரச்சினைக்கு நீ முடிவான தீர்ப்புக் கூறுவாயா? இந்த மனிதன் எனது உயிரைக் காத்தான். அதற்கு நன்றிக்கடனுக அவனைக் கொல்ல வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அன்புக்குப் பதிலாக ஒருவர் என்ன செய்ய வேண்டும் என்று எங்களுக்குகூறு''

''எனக்கு வயது போய்விட்டது. காது கேட்பதில்லை'' என்று பூனை கூறியது பாம்பு தலையை நீட்டி, தான்கூற வேண்டியதை எல்லாம் பூனையின் காதிலே கூறியது. பூனை தனது கூரிய நகங்களால் பாம்பைப் பற்றிப் பிடித்தது. குரல்வளையை நெரித்து அதனைக் கொன்றது.

வேடன் மகிழ்ந்தான் பூனையைத் தனது தோளில் இருத்தி வீட்டிற்குக் கொண்டு சென்ருன். அந்த நாள் முதல் பூனைகள் மனிதரோடு நட்பாக வாழ்கின்றன. ★

தரமான கலர்ப்படப் பிரதிகள்

* அதிகுறை கட்டணத்தில்
* மிகக் குறுகிய காலத்தில்

கலர்ப்படச்சுருள் கழுவுதல்

முற்றிலும் இலவசம்

* நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்தல்
* 3 முதல் 5 நாட்களில் விநியோகம்

**ஷப்ருவை** நாடுங்கள்

**ஷப்ரு நிதி நிறுவனம்**

207, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 22073




எமது மதிப்புக்குரிய வாடிக்கையாளர்களுக்கு

உங்கள் அபிமானத்துக்குரிய

# ★ S. P. அன்ரன் ★

**மகிழ்ச்சியுடன் வழங்கும் வெளிநாட்டு பயண ஒழுங்கு**

கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், அமெரிக்கா, சவுதி அரேபியா, குவைத் சிங்கப்பூர் மேற்படி நாடுகளுக்கு நம்பிக்கையாகவும், பாதுகாப்பாகவும் பயணம் செய்ய சகல ஒழுங்கும் செய்து தருகிறோம். இத்துடன் வீட்டுப் பணிப் பெண்களுக்கும் கனடா, ஓமான், கிறீஸ், சிங்கப்பூர் செல்ல உதவுகிறோம்.

சகல விபரங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :-
உங்கள் பயண அமைப்பாளர்

**S. P. அன்ரன்**

648 1/3 ஆஸ்பத்திரி வீதி
[ காப்புறுதிக் கூட்டுத்தாபன முன்பாக ]
யாழ்ப்பாணம்.

இச்சிறுவர் இலக்கியத் திங்கள் இதழ் நியு உதயன், பப்பிளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் 15, 2வது ஒழுங்கை மின்சார நிலைய வீதியில் உள்ள அவர்களது அச்சகத்தில அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கூர்ந்து கவனியுங்கள்!

'ஜூபிரு'வின் நிதி அறிக்கையை
கூர்ந்து கவனியுங்கள்!!
நம்பிக்கை தானே பிறந்துவிடும்!!!

## கூர்ந்து கவனியுங்கள்!



### நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,425,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283.816 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரிசெலுத்து முன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்திய பின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

### நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17[illegible] |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |